விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது


Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 16 புதன்கிழமை (02.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசியல் தீர்வு வழங்கினால் நிரந்தர அமைதி ஏற்படும்!

## இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு



(ஒட்டாவா) இலங்கையில் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட்டால், அதன்மூலம் நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார். அதனை விடுத்து, அரசாங்கம் வேறு எதனையும் வழங்க நடவடிக்கை எடுத்தால், அதனை பெற்றுக் கொள்ள நாம் தயாரில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 7ஆம் திகதி பொது விடுமுறை தினம்

(கொழும்பு)

ஹஜ் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

ஹஜ் தினத்தில் பொது விடுமுறை வழங்குமாறு பல இஸ்லாமிய அமைப்புகள் கோரியதற்கு அமையவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சு தெரிவித்தது. (எ-11)

## தந்தை செல்வாவின் சிலை சீரமைப்பு

(திருகோணமலை)

சேதமாக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் உருவச்சிலை சீரமைக்கப்பட்டு நேற்று பிற்பகல் 3மணிக்குதிறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சிவன்கோயிலுக்கு அண்மையில் 34 வருடங்களுக்கு முன்னர் பிரதேச இளைஞர்களாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனுசரணையுடனும் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வநாயகத்தின் உருவச்சிலையின் தலை இனந் தெரியாதோரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சேதமாக்கப்பட்டது.

இந்நிலையில் திருகோணமலை தமிழ் மக்கள் மத்தியிலும் வடக்கு கிழக்கின் தமிழர் பிரதேசங்களிலும் இச் செய்தி பெரும் விசனத்துக்கும் கண்டனத்திற்கும் உள்ளாகியிருந்தது.

இதனை அடுத்து திருகோணமலை பொலிஸ் பிரிவின் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் என்ற அடையாளத்தை இழக்கக்கூடிய நிலையில் உள்ளோம்

### கனடாவில் மாவை எம்.பி. தெரிவிப்பு



இலங்கை மண்ணின் சொந்தக்காரர்களாக இருக்கின்ற தமிழர்கள், தமிழர்கள் என்ற அடையாளத்தை இழந்துவிடக் கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கம் அதனைத் தனது நிகழ்ச்சிநிரலாக ஆக்கிக் கொண்டு இராணுவத்தினுடைய கட்டளையின் அடிப்படையில் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொரன்ரோவில் நடைபெற்ற விருந்தோம்பலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்துமாவைசேனாதிராஜாபேசும்போது உலகத்திலே கனடா நாடு பல இனங்களை கொண்ட ஒரு நாடு. மிகச் சிறந்த ஒரு அரசியல் அமைப்பை கொண்டவர்களாக கனடியர்கள் இருக்கிறார்கள். அதைவிட இந் நாட்டிலே ஆங்கிலம் பேசுகின்ற கனடியர்கள், பிரெஞ்சு பேசுகின்ற கனடியர்கள் என்பதற்கு அப்பால் ஒரு விடுதலைக்காக போராடிக் கொண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வினை தமிழ் மக்கள் கோரவில்லை

### அமைச்சர் விமல் சுட்டிக்காட்டு

தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வினை கோரவில்லை. சொகுசு வாழ்க்கை வாழ்ந்து, தேர்தல் காலத்தில் திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் ஓடிச் செல்லும் தரப்பினருக்கே அதிகாரப் பகிர்வு தேவைப்படுகிறது என தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனினும் அவை அபிவிருத்தி சார்பான பிரச்சினைகளே.

தமிழ் மொழிகளில் கருமங்களை ஆற்றுவதற்கு அதிகாரிகள் இன்மை, வீடுகள் இன்மை, பாடசாலை பிரச்சினைகள் உள்ளிட்ட சில அபிவிருத்தி சார் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை.

தமிழ் மக்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதி ஆற்றில் மூழ்கி பெண் உயிரிழப்பு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வட்டு வடக்கு கலைநகர் சித்தன்கேணியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மாலினி (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

கந்த சஷ்டி விரதத்தை முன்னிட்டு தனது தாயாருடன் செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்ற அவர் ஆற்றில் நீராடும் போது சுழியில் சிக்கி உயிரிழந்ததாக கூறப்படுகின்றது.

இச் சம்பவம் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா சென்ற எம்.பிக்களின் உறுப்புரிமை பறிக்கப்பட வேண்டும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ,கனடா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று சூழ்ச்சிகளை மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பாராளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் யாப்பின் 6ம் அத்தியாயத்திற்கு அமைய நாட்டை பிளவுபடுத்தவோ சர்வதேச சூழ்ச்சிகளுக்கு துணைபோகவோ தேசத் துரோக செயல்களில் ஈடுபடவே மாட்டோம் என சத்தியப்பிரமாணம் செய்து விட்டு தற்போது அவற்றை மீறி அமெரிக்கா , கனடா சென்று செயற்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காட்டிக் கொடுப்புக்கு மத்தியில் எமக்குள்ள சவால் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## விகாராதிபதியைக் கட்டி புதையல் தோண்டிய குழு

அநுராதபுரம் மாவட்டத்தின் கெப்பிற்றிக் கொள்ளாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹலவெவ புராதன விகாரையின் விகாராதிபதியை மரமொன்றில் கட்டி வைத்துவிட்டு புதையல் தோண்டிய சம்பவமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றது.

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஒன்பது பேர்கொண்ட குழுவினர் புதையலை தோண்டி எடுக்கும் முன்னர் பொழுது புலர்ந்ததால் புதையல் எதனையும் எடுக்க முடியாத நிலையில் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை (19ஆம் பக்கம் பார்க்க)

# கல்விசாரா ஊழியர்கள் இன்று பகிஷ்கரிப்பு

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இன்று காலை 9 மணிக்கு ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களின் நிர்வாக உத்திளோகத்தர் சம்மேளனம், துணைக் கல்விசார் சங்கம், ஸ்ரீ லங்கா தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம், உப விடுதிக் காப்பாளர் சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் என்பன ஆதரவளிக்கின்றன.

இவ்வடையாள வேலை நிறுத்தத்தில் பாதுகாப்பு உத்தயோகத்தர் தவிர்ந்த அனைத்து போதனை சாரா ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊழியர் சங்க தலைவர் சி.தங்கராஜா அழைப்பு விடுத்துள்ளார். (எ-11)

# கலந்துரையாடல்

உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து பட்டம் பெறவுள்ள யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் தலைவர் செ.செல்வரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே பட்டம் பெறவுள்ள சகல மாணவர்களையும் குறித்த நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் வ.தயாபரன் அறிவித்துள்ளார். (எ)

# அளவ்வை ரயில் விபத்துக்கு சாரதியே காரணம்!

## விசாரணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அளவ்வையில் கடந்த செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற ரயில் விபத்துக்கு ரயில் சமிக்ஞை, வேகக்கட்டுப்பாடு ஆகியவற்றை ரயில் சாரதி மதிக்காமையே காரணமென அளவ்வை ரயில் விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக போக்குவரத்து அமைச்சால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ரயில் என்ஜினில் எந்தவித கோளாறும் இல்லையெனவும் ஆதர் சி.கிளாக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் குழுவின் உறுப்பினருமான சனத் பனவென்னகே தெரிவித்துள்ளார்.

ரயில் வேகத்தைக் குறைக்குமாறு எஸ் 11 எனும் ரயில் சாரதிக்கு தெரிவிக்கப்பட்டபோது அவர் மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் ரயிலை செலுத்திச் சென்ற நிலையில் பிறேக்கை அழுத்தியுள்ளார். ரயிலின் அதிக பட்சவேகம் மணிக்கு 72 கிலோமீற்றர்தான் என அவர் கூறினார். குறித்த ரயில் சென்ற வேகத்தை ரயில் என்ஜின் லொக்கர் கருவி சுட்டிக்காட்டுவதாகவும் அவர் கூறினார்.

ரயில் நிலையத்தில் ரயில் ஒன்று தரித்து நிற்காவிடின் இந்த விபத்து இடம்பெற்றிருக்காது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த ரயில் விபத்து இடம்பெறவில்லை. ரயில் பிறேக், சமிஞ்ஞைகள், என்ஜின் ஆகியன சிறந்த முறையிலேயே தொழில்பட்டன. இருப்பினும் ரயில் சமிஞ்ஞை மற்றும் அதிக பட்சவேகம் என்பன குறித்து ரயில் சாரதியால் மதிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

அளவ்வையில் கடந்த செப்டெம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற ரயில் விபத்தில் ரயில் சாரதி, உதவி ரயில் சாரதி, வெளிநாட்டவர் ஒருவர் உள்ளிட்ட மூவர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வீடு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

512வது பாதுகாப்பு பிரிவு அதிகாரியின் வழிநடத்தலில் அரியாலை 7ஆவது கஜபாகு ரெஜிமென்ட் பிரிவினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு கையளிக்கும் நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரிகேடியர் அ.பி.டி.ஜி விக்ரமரட்ண பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

போரினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த ஐந்து பிள்ளைகளை கொண்ட குடும்பத்திற்கு இவ் வீடு கையளிக்கப்படவுள்ளது. (எ-11)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் இருவருக்கிடையே கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளரை பார்வையிடச் சென்ற ஒருவருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்குமிடையே நேற்று மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது. இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர் ஒருவரை பார்ப்பதற்கென மூன்று இளைஞர்கள் நேற்று வைத்தியசாலைக்கு வந்தனர்.

அப்போது வெளிநோயாளர் பிரிவுக்கு அருகாமையில் வைத்தியசாலைக்கு வந்த இளைஞரில் ஒருவர் கைத்தொலை பேசியில் யாருடனோ உரையாடியவாறு நின்றுள்ளார்.

அச் சந்தர்ப்பத்தில் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் குறித்த நபரை அப் பகுதியில் அப்புறப்படுத்த முற்பட்டார்.

இதற்கு மறுப்பு தெரிவித்த இளைஞனுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குமிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டு இறுதியில் மோதலாக மாறியது.

இருவரும் வைத்தியசாலை வளாகத்திற்குள் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டனர். இதனால் வைத்தியசாலையில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கிடையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருதரப்பினராலும் முறைப்பாடு செய்யப்பட்டதோடு பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை விசாரணை செய்தனர்.

இதேவேளை இந்த சம்பவத்தில் காயம் அடைந்த கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞனும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-6)

SWISSTEK

டைல் மோட்டார்

ஃபுளோர் மற்றும் வோல் டைல்களைப் பதிப்பதற்கான நவீன உடனடிக் கலவை

சர்வதேச நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டது

சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.

## பதவி வெற்றிடம்

- ஓவ்செற் இயந்திர இயக்குநர் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

தூர இடங்களில் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் தங்குமிட வசதி, உணவு வசதி என்பனவும் வழங்கப்படும்.

நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
வலம்புரி,
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

## சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் யாழ்ப்பாணம், இலங்கை

### எழுத்தாளர் அவை அங்குரார்ப்பணம்

*மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாகவும், இளம் அந்தணர்கள் மத்தியில் எழுத்தாற்றலை வளர்க்கவும் எழுத்தாளர் அவையை ஏற்படுத்த உள்ளோம். எனவே மூத்த அந்தண சமய, தமிழ் எழுத்தாளர்களும், எழுத்தாளர்களாக உருவாக விருப்புடைய இளைய அந்தண எழுத்தாளர்களையும் அவையில் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

| | | |
|---|---|---|
| அங்குரார்ப்பண நாள் | : | 03.11.2011 வியாழக்கிழமை மாலை 2.30 மணி |
| இடம் | : | தலைமைச் செயலகம், ஆனைப்பந்தி |
| தலைவர் | : | சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள் (ஒன்றியத் தலைவர்) |
| சிறப்பு விருந்தினர் | : | பிரம்மஸ்ரீ. N. சதாசிவஐயர் (பிரதிப் பதிவாளர் நாயகம்) |
| கௌரவ விருந்தினர் | : | சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய வித்வ சபையினர் |

அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.
அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

(6715)

# மரண அறிவித்தல்

## குழந்தைவேலு விஜேந்திரா



சட்டத்தரணி குழந்தைவேலு விஜேந்திரா *28.10.2011* அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற குழந்தைவேலு முத்தம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் பிம்லாதேவியின் அன்புக் கணவரும் மேரி டிலுக்சியின் பாசமிகு தந்தையும் ஜோசனின் அருமை மாமனாரும் கமலாதேவி, இராஜகுலேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலம்சென்ற செல்வரட்ணம்(சட்டத்தரணி) தம்பதியினரின் ஆசை மருமகனும் காலம் சென்ற சட்டத்தரணி இராமநாதன், சட்டத்தரணி சுகந்தி, மொகாந்தி, சாளினி, றம்லா, டேவிட், டொமினிக் ஆகியோரின் மைத்துனரும் நிலானி செந்தில்நாதன், பூம்பாவை வாசுதேவன், அச்சுதராமன், அருள்மொழிராமன், சிறிராஜா ராமன் ஆகியோரின் மாமனாரும் எழில்மொழி, சுபாங்கி ஆகியோரின் பெரிய தகப்பனும் வர்ணன், நிலக்சன், லாவண்யா, ஆரண்யாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை 12 மணிக்கு அன்னாரின் இல்லமான திகரி புலோலி கிழக்கு பருத்தித்துறையில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர் சட்டத்தரணி
G.Rajakulendra

Tel: 0212263679,
0776354633

(சி-4884)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு விசாக்கள் எம்மிடம் உள்ளன. 10 நாட்களுக்குள் பயணம். பணவசதி இல்லாதவர்களுக்கு கடன் வசதி செய்து தரப்படும்.

தொடர்புக்கு:-
T.P.:0726808891

(6713)

நல்ல நிலையில் உள்ள போட்டோ கொப்பி மிசின் உடன்விற்பனைக்குஉண்டு.

ISC LANKA (PVT) LTD.
553, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No.:0779797424
/ 0750477313

(6711)

## யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல் – 2012

**2011.10.30-ம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட எமது விளம்பரத்தில் குறிப்பு:- 11 மேலதிகமாக சேர்க்கப்படுகின்றது.**

11. சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக்கடைகளில் குருநகர் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணம் ரூபா 7000.00உம், ஏனைய இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள் என்பனவற்றிற்கு மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணமாக ரூபா 5000.00உம் அறவிடப்படும்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
2011.11.01

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர், மாநகரசபை.

(சி-4883)

# இன்று ஒரு தகவல்

## செய்வினை என்ன செய்யும்?

ஒரு கிராமத்தில் ஒருவன் தன்னுடைய நகங்களை வெட்டிக் கொண்டிருந்தான். வெட்டி முடிந்ததும்... ஒரு வயதானவர் அதைப் பார்த்தார்.

"அதையெல்லாம் மற்றவர்கள் கண்ணிலே படுகிற மாதிரி போடாதே! ஆபத்து!" என்றார்.

"என்ன ஆபத்து?" என்று கேட்டான்.

"பில்லி – சூனியம் செய்கிறவன் எடுத்துக் கொண்டு போகப்போகிறான்" என்றார்.

வேண்டாத ஒருவனுக்கு ஏதாவது கெடுதல் விளைவிக்க வேண்டுமென்றால் உடனே மந்திரவாதியைத் தேடிப் போவது வழமையாகும்.

மந்திரிவாதி என்ன செய்வானென்றால், யாருக்கு சூனியம் வைக்க வேண்டுமோ அவனுடைய காலடிமண், முடி, நகம் இவற்றையெல்லாம் எடுத்து வரும்படியாக கூறுவான். இவையெல்லாம் ஏமாற்றுவேலை. மனிதனுடைய முடி... நகம்... இவை அனைத்தும் வெட்ட வெட்ட வளரும். அதனால் இவற்றினுள் உயிர் இருப்பதாக ஆதிமனிதர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

மனிதன் அதை வெட்டியெறிந்தாலும்; அதனுடன் மனிதனுக்குத் தொடர்பு இருப்பதாக நம்பினார்கள்.

அந்த நம்பிக்கை தொடர்ந்து வந்ததன் விளைவாகத்தான் தற்காலத்தில் மந்திரவாதிகள் நகத்தையும் முடியையும் எடுக்கிறார்கள்.

அந்த நகத்திற்கும் முடிக்கும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தினால், அது தொடர்பானவனுக்குப் போய்ச் சேர்ந்துவிடும் என நினைக்கிறார்கள்.

இதுபோன்ற நம்பிக்கைகள்தான் இன்று நகம்... முடி... இவற்றையெல்லாம் மற்றவர்களின் கண்ணுக்குப்படும்படி போடக்கூடாது என்ற வழக்கத்தை உண்டாக்கியிருக்கிறது!

அது மட்டுமில்லை. சூனியத் தகட்டிலே பெயரை எழுதிப்புதைக்கிறதும் உண்டு.

இதனால்தான் பெண்கள் கணவன் பெயரைச் சொல்லாத பழக்கம் ஏற்பட்டது. பெயரைக் கேட்டு விட்டுப்போய் ஏதாவது கெடுதல் செய்து விடுவார்கள் என்ற பயம்.

அப்படி ஆரம்பித்த பழக்கம்தான் இன்றைக்கு ஏதோ மரியாதைக்காக கணவன் பெயரை பிறர் முன்னிலையில் சொல்வதில்லை என்ற மாதிரி ஆயிற்று.

அவுஸ்திரேலியாவில் உள்ள பழக்குடி மக்களிடம் ஒரு பழக்கம் இருந்தது. ஏதாவது பழங்கள் சாப்பிட்டால் அதனுடைய விதையைத் தண்ணீரிலோ அல்லது ஆற்றிலோ போட்டு விடுவார்கள். வெளியே எறிந்தால் அதை எடுத்து செய்வினைக் குப் பயன்படுத்தி விடுவார்கள் என்ற பயம் அவர் களிடம் இருந்தது.

இதுமாதிரி உலகம் முழுவதும் செய்வினையின் மூலம் அடுத்தவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியுமென்ற நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிரியர்களுக்கான விளையாட்டுப்போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்திற்கு 2 தங்கங்கள்

ஆசிரியர்களுக்கு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி அண்மையில் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் விளையாட்டு துறை பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து பங்குபற்றிய ஆசிரியர்கள் 2 தங்கப்பதக்கங்களையும் 4 வெள்ளிப் பதக்கங்களையும் 3 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

இதில் மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து பங்குபற்றிய ஆசிரியர் செல்வராஜா செல்வச்சந்திரன் (4X400) அஞ்சல் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும் குண்டு எறிதலில் வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

மு/துணுக்காய் அரச தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து பங்குபற்றிய ஆசிரியை சிவபாலசுந்தரம் ஸ்ரீ மிதுலா உயரம் பாய்தலில் வெள்ளி பதக்கத்தையும் 4X400 அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும்4X100 அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

மு/தண்டு வன் அரச தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து பங்குபற்றிய ஆசிரியை செல்வி மரியநாயகம் மேரி அனுசியா 4X400 அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தினையும் 4X100 அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.

அத்தோடு மு/நட்டாங்கண்டல் அரச தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் செல்வராஜா குமரன் 4X400 அஞ்சல் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தினையும் 4X100 அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுள்ளதாக துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர்பு.விஜயபாலா அறிவித்துள்ளார். (4-15-2)

# திட்டமிடல் சேவையின் சிறப்பு தரமுயர்வு

அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாக இலங்கை பொது சேவை ஆணைக்குழுவினால் திட்டமிடல் சேவைக் குறிப்பில் முதற் தடவையாக சிறப்பு வகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய (SLPS SPECIAL GRADE) இச் சேவையின் வகுப்பு-I இல் மூத்த அதிகாரிகளில் ஒருவரான ஸ்ரீ செல்வந்திநாகக் குருக்கள் சுவாமிநாதன், வடக்கு மாகாண பொது நிர்வாகச் செயலக பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், பாரம்பரிய கைத்தொழில், முதலீடுகளுக்கான அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி ஆகிய மூவரும் தர முயர்த்தப்பட்டுள்ளனர். (4)

# மாணவர்களுக்கான கருத்தரங்கு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் தமிழ் பாடத்தின் அடைவு மட்டத்தினை அதிகரிக்குமுகமாக விசேட தமிழ் பாட கருத்தரங்கு நாளை, 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடத்த துணுக்காய் கல்வி வலயம் ஒழுங்கு செய்துள்ளது.

இக் கருத்தரங்குகளிற்கு ஏற்கனவே துணுக்காய் வலய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபங்களுக்கமைவாக மாணவர்களை தங்களிற்கு அறிவிக்கப்பட்ட நிலையங்களிற்கு ஒழுங்கு முறைப்படி வருகை தருமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் த.மேகநாதன் கேட்டுள்ளார்.(4-2-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 130 | 160 | 130 |
| தக்காளி | 80 | 70 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 25 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 85 | 120 | 70 |
| பூசணி | 45 | 60 | 40 |
| புடோல் | 40 | 80 | 40 |
| வாழைக்காய் | 30 | 50 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 70 | 90 |
| பெரிய வெங்காயம் | 75 | 75 | 80 |
| பாகற்காய் | 280 | 300 | 90 |
| வெண்டிக்காய் | 30 | 90 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 170 | 250 | 80 |
| லீக்ஸ் | 35 | 40 | 40 |
| பீற்றூட் | 15-20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 60 | 120 | 70 |
| முருங்கைக்காய் | 20 | 90 | 60 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 15 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*02.11.2011*
*(ஐப்பசி 16, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*சப்தமி பிற்பகல் 3.31 மணிவரை*
*உத்தராடம் பிற்பகல் 4.45 மணிவரை*
*இராகுகாலம் 12.04-1.34 மணிவரை*
*சுபநேரம் 4.34-6.04 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் சுமுகமாக முடியும், பிரயாணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சியுண்டு.

**மிதுனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு தேவை, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வெளியூர்ப் பயணங்களால் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், எதிரிகள் விலகுவர், தொழில் போட்டிகள் மாறும், கௌரவமான நாள், எடுத்த காரியம் கைகூடும், உடல் நலம் சீராகும்.

**கன்னி** இன்பங்கள் இல்லம் தேடி வரலாம், தடைப்பட்ட காரியம் கைகூடும், உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், ஆலய தரிசனத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றமேற்படும், வாகன சுகமுண்டு, சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், விரதம்,வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியம் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** எதிர்பாராத வகையில் தனவரவுகள் ஏற்படலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற சண்முகப் பெருமானை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சில தகவல்களால் நன்மையுண்டு.

**கும்பம்** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை கூடும், எடுத்த காரியம் கைகூடும்,வருமானங்கள் திருப்தி தரும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

வளவன்

# அடையாள அட்டை கண்டெடுப்பு

ஏழாலை மயிலங்காடு எனும் முகவரியைச் சேர்ந்த லலிதா ஆனந்தராசா என்பவரது (698614226V) இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் வசாவிளான் தோலகட்டி எனும் முகவரியை சேர்ந்த யேசுதாஸ் எல்வின் விசயரட்ணம் என்பவரது (7231945 39V) இலக்கமுடைய தேசிய அடை யாள அட்டையும் கண்டெ டுக்க ப்பட்டு யாழ். போ தனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் ஏ.எஸ். பிரசாந் அறிவித்துள்ளார்.

எனவே உரியவர் தகுந்த ஆதாரத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# பண்பாட்டு திருவிழா

(அச்சுவேலி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினரால் பிரதேச பண்பாட்டு திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் பர்வதபத்தினி கலாமண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையின் தலைவர் இ.வரதேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய மக்கள் வங்கி அலுவலக உத்தியோகத்தர் மு.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-2-70)




# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். பாராளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடை பெறும்.

இக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

எனவே பிரதேச திணைக்கள தலைவர்களையும் அரச சமுகமளிக்குமாறு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-2)

# யாழ்.கிளி. மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திடடங்கள் தொடர்பாகவும் மக்களின் தேவைகள் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் மீள்குடியேற்றம், மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், மக்களின் மீள்குடியேற்றம், மீள்குடியேற்றத்திற்கு தடையாகவுள்ள காரணங்கள் மற்றும் மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், வீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விளங்கப்படுத்தினார்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் திட்டங்கள், மீள்குடியேற்றம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் விளங்கப்படுத்தினார்.

இதேவேளை மக்களினாலும் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக மீள்குடியேற்றப்படும் பகுதிகளில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படவில்லை எனவும் மின்சாரம், பாடசாலைகளுக்கான வசதிகள் என்பன பூர்த்தியாக்கப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

இது தவிர வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவின் போது அரசாங்க உத்தியோகத்தர்களை இணைக்க முடியாது என யாழ். அரச அதிபர் பத்திரிகைகள் மூலம் அறிவித்திருந்தார்.

யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிப்படைந்து குறைந்த வருமானத்துடன் அரச திணைக்களங்களில் பணி புரிந்து வருபவர்களுக்கு வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் மின்சாரம் வழங்கப்படவில்லை. குறிப்பாக அரியாலை கிழக்கு , பூம்புகார், வடமராட்சி கிழக்கு , நாகர் கோவில் பகுதி போன்றவற்றில் மக்கள் குடியேறி பல மாதங்கள் ஆகியும் இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

அத்தோடு மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்து பாதைகளை பூட்டி வைத்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ், நாகர் கோவில் இதுவரை திறந்து விடப்படவில்லை. ஆனால் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என பல விடயங்கள் தொடர்பாக விபரித்தனர்.

இதேவேளை மக்களின் வேண்டுகோள்கள் அனைத்தும உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நிவர்த்தி செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், செ.அலெஸ்ரின் மற்றும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, வடமாகாணத்தின் செயலாளர் எஸ்.சிவசுவாமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் எனப் பலர் கலந்து கொண்டனர். (4-6)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சியில் உள்ள மாலுசந்தி வியாபாரி மூலை வீதியானது நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் பயணிப்பதில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்தோடு, வடமராட்சியின் பிரதான வீதியாக அமைவதால் தினமும் பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன.

அத்துடன் குழிகளில் தேங்கி நிற்கும் நீரானது வாகனத்தின் பயணத்தின் போது தெளிக்கப்படுவதால் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் வேலைக்கு செல்பவர்களின் ஆடைகள் அழுக்கடைகின்றன.

இதனால் உரிய நேரத்திற்கு சமுகமளிக்க முடியாத அவலநிலைக்குள்ளாகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியை கூடிய கவனம் செலுத்தி மக்களின் போக்குவரத்துக்கு உகந்த வீதியாக அமைத்து தருமாறு அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-2-24)

# ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த தேசிய மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வியமைச்சின் இசுருபாய செயலாளர் எச்.கே. குணசேகர,கல்வியமைச்சின் இசுருபாய மேலதிக செயலாளர் கே.மொகமட் தம்பி, இலங்கைக்கான எப்.இ.எல்.வதிவிடப் பிரதிநிதி திருமதி பெற்றீனா மெஜர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார, கௌரவவிருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்ஏ.எம்.ஈ.போல் (எப்.ஈ.எஸ்) திட்டப் பணிப்பாளர் எஸ்.எச்.ஏ.மொகமட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட அதிதிகளாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர்களான எஸ்.தண்டாயுதபாணி,என்.இராஜநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-2)

# வடஇந்து மகளிர் தெரிவு

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுவர் அரங்க நிகழ்வில் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தை பெற்று மாகாணமட்ட போட்டியில் தெரிவாகியுள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ள சிறுவர் அரங்க மாகாண மட்ட போட்டிக்கு பங்கேற்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4-2-24)





வடமாகாண கல்வி வலயங்களுக்கிடையில் 2012 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன்,வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட வலயக் கல்விப்பணிப்பாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# த.தே.கூ. உடன் பேசும் போது அவதானமாக இருக்க வேண்டும்

## ஐ.நா.அதிகாரிகளை கோரினார் சமரசிங்க

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டாம் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் செயலக அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அச்சந்திப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் லீன் பாஸ்கோ மற்றும் பான் கீ மூனின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் ஆகியோரிடமே மகிந்த சமரசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுப்பதற்கு பல அரசியல் கட்சிகள் இருப்பதாக அவர்களிடம் கூறிய மகிந்த சமரசிங்க அக்கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு மாறான கொள்கைகளைக் கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தும் போது அவதானமாக இருக்க வேண்டும் என இவர்களிடம் அமைச்சர் மகிந்த சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் தென்பகுதியில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடனும் ஐக்கிய நாடுகள் சபை கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இவ்வாண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 3 ஆயிரத்து 896 சதவீதமான வாக்குகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 35 சதவீதமான வாக்குகளும் கிடைத்ததாக அவர் தனது கோரிக்கைக்கு காரணம் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆயிரத்து 381 சதவீத வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4 ஆயிரத்து 278 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்ததாக இவர்களிடம் இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித ஹொகனவும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடனான இச் சந்திப்பைத் தவிர்க்க வேண்டும் என பாலித ஹொகன கோரிக்கை விடுத்திருந்த் போதிலும் பான் கீ மூன் அக்கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## ஒருங்கிணைப்பு கூட்டம்

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 ம்ணிக்கு மருதங்கேணியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் ஆராயவுள்ளார் எனவும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார். (4)

## கருத்தரங்கு

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால், யாழ். மாவட்ட க.பொ.த (சா/தரம்) மாணவர்களிற்கான தொடர்பாடலும் ஊடகக் கற்கைநெறிக்குமான பாடக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்ட வலயப் பாடசாலைகளில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தை கற்கின்ற அனைத்து மாணவர்களும், அதற்குரிய பொறுப்பான ஆசிரியர்களும் பங்கேற்றுக் கொள்ளுமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (4-2)

## இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை பத்திரம் வழங்கல்

இந்தியாவில் பிறந்த 100 குழந்தைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யுத்தம் காரணமாக இந்தியாவிற்கு சென்றவர்களுக்கு அங்கு குழந்தைகள் பிறந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பியிருந்தும் இலங்கை பிரஜாவுரிமை கிடைக்காது பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வந்திருந்தனர்.

இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பிரஜாவுரிமை பெறுவதற்கான நடமாடும் சேவையினை ஏற்பாடு செய்திருந்தது. அதனூடாக பலர் நன்மை பெற்றிருந்த நிலையில் அவ்வாறு விண்ணப்பம் செய்த 100 பேருக்கான பிரஜாவுரிமை சான்றிதழ்கள் இன்று வழங்கப்பட்வுள்ளன. (4-2)

## பெரும்பாலான குழந்தைகள் ஜனநாயக ஆட்சியில் வாழ்கின்றனர்

### 700 கோடியை எட்டியமை குறித்து பான் கீ மூன்

உலகின் மக்கள் தொகை 700 கோடியைத் தொட்டுள்ளதை வரவேற்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான் கீ மூன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

நமது பூமி மிகவும் நெரிசலாகி வருகிறது என்று பலர் கூறுகின்றனர். தான் அவ்வாறு கருதவில்லை என்றும், உலக மக்களின் பலம் 700 கோடியாக உயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலின் அடிப்படையில் சமூகத்தை கட்டி எழுப்பவும் அனைவரும் நன்மை பெறவும் இந்த பலத்தை பயன்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகம் மிகச் சிறப்பான வளர்ச்சி கண்டு வரும் வேளையில், பெரும்பாலான குழந்தைகள் ஜனநாயக ஆட்சியின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வளர்ச்சியை எவரும் முறித்துவிட முடியாது. பருவகால மாற்றம், பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, ஏற்றத்தாழ்வுகள், சகிப்புத்தன்மையின்மை ஆகியவற்றால் உலகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உலக மக்கள் என்ற இலக்கை நோக்கி அனைத்து நாடுகளும் இணைந்து செயற்படுவதை இன்றைய சூழல் உருவாக்கியுள்ளது என்று பான் கீ மூன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (4-2)

## துமிந்தவை சந்திக்கச்சென்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் குழுவினர் ஸ்ரீ ஜயவர்த்தன புர மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் இரவு விஜயம் செய்தனர்.

இதன்போது அவர்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வாவின் தேகநிலை குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது ஐந்து அமைச் சர்கள், ஜனாதிபதி செயலக பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான அநுர பிரியதர்சன யாப்பா, திஸ்ஸ கரலியத்த ஆகியோர் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)


1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

சசிகரன்–சுபித்திரா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன்

டதுசஜன்





முதலாவது பிறந்த தினத்தை 02.11.2011 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்களான சுமித், மிதூரன், வானுசன், அன்ரா வானுசா, தபேந்திரன் அப்பப்பா குடும்பம், ரவீந்திரன் அம்மப்பா குடும்பம், இரத்தினம் அம்மப்பா குடும்பம், சங்கானை அப்பம்மா, சித்தப்பாமார், அத்தை, மாமா, மச்சாள், பாட்டி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அருளினைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(சி-4877)

தகவல்:-அன்ராமார்
ஆர்.நிலக்ஷி, துளசி.





நவாலி-அட்டகிரி

முருகன் தேவஸ்தானம்

திருக்கல்யாண திருவிழா–2011

முருகன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான கரவருட ஐப்பசி 16ஆம் நாள் (02.11.2011) புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் முருகப்பெருமானுக்கு விஷேட பூசைகள் நடைபெற்று திருக்கல்யாணத் திருவிழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தொடர்ந்து 6.30 மணியளவில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக அழகிய பூந்தண்டிகையில் விசேட தவில், நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க வீதியுலா வந்து அருட்காட்சி கொடுப்பார்.

தொடர்ந்து விசேட நிகழ்ச்சியாக, யாழ். புகழ்பூத்த தவில், நாதஸ்வரவக் கலைஞர்களுடன் தென்னியந்தியக் கலைஞர்களின் மேளக்கச்சேரி நடைபெறும்.

நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வரிசையிலே...

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| எஸ்.சிவகுமார்–தொல்புரம் | கலைமாமணி கோவிலூர் கே.ஜி.கல்யாணசுந்தரம் – தமிழ்நாடு |
| பி.எஸ்.பாலமுருகன்–நல்லூர் | என்.நந்தகுமார் –யாழ்.வண்ணை |
| என்.ராஜ்குமார்–யாழ். | பி.எஸ்.செந்தில்நாதன்–நல்லூர் |
| பி.எஸ்.ஜெயசங்கர்–நல்லூர் | எஸ்.துளசிடரன்–தொண்டைமானாறு |

ஒலி-ஒளி அமைப்பு:- விமல்-மல்லாகம்.

இவ்வண்ணம்,

நவாலி. திருக்கல்யாணத் திருவிழா உபயகாரர்.

(சி-4181)

# தமிழினம் காக்க கோவையில் கூடியது பொதுவுடைமைக் கட்சி

(கொழும்பு)

**தமிழர்களை இன அடிப்படையில் ஒருங்கிணைக்கும் பெரும் முயற்சியாக ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவையில் நடைபெற வுள்ள நிலையில், அம்மாநாட்டில் அனைவரையும் பங்கேற்குமாறு தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் பெ.மணியரசன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்சி சார்பற்ற முறையில் தமிழர்களை இன அடிப்படையில் ஒருங்கிணைக்கும் பெரும் முயற்சியாக ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவை வ.உ.சி.பூங்காத் திடலில் எதிர்வரும் 6ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் பல்வேறு கட்சிகளும், தமிழ்த் தேசிய அமைப்புகளும், தமிழின உரிமை அமைப்புக்களும் பங்கேற்கின்றன.

2008 தொடக்கம் 2009 ஆண்டுகளில் ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர்களை இலங்கை அரசு இனப்படுகொலை செய்தது. போர்க்குற்றவாளிகளாகவும் உள்ள ராஜபக்ஷ ஆட்களைத் தளைப்படுத்தி, பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். போர் அழிவுக்குப் பிந்தைய காலத்தில் நடைபெற வேண்டிய துயர் துடைப்புப் பணிகள் இலங்கை அரசால் நடத்தப்படவில்லை. ஐ.நா. மற்றும் பன்னாட்டுக் கண்காணிப்பின் கீழ் ஈழத்தில் துயர் துடைப்புப் பணிகளை செயற்படுத்தி எஞ்சியுள்ள தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும்.

ராஜீவ் கொலை வழக்கில் பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டு, தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட அப்பாவித் தமிழர்கள் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை தூக்கிலிடத் துடிக்கும் இந்திய அரசின் தமிழின பகை முயற்சியை முறியடித்து அம்மூவரையும் காப்பாற்ற வேண்டும்.

மேற்கண்ட மூன்று முகாமையான கோரிக்கைகளை முன்வைத்து கோவை மாநாடு நடைபெறுகிறது. கைக்கு எட்டிய தொலைவில் இருந்தும் நம் இனம் இந்திய ஏகாதிபத்தியத்தின் துணையோடு இலங்கை அரசால் அழிக்கப்பட்டதை தடுக்க முடியவில்லையே என்ற குற்ற உணர்ச்சியும், ஆறாத காயமும் தமிழர்கள் நெஞ்சில் அப்படியே உள்ளன.

இப்பொழுது முழுவீச்சில் நாம் செயற்பட்டு நம் இன மக்களை ஈழத்திலும், தூக்குக் கொட்டடியில் உள்ள தமிழர்களை இங்கும் பாதுகாக்க வேண்டிய கட்டாயக் கடமை நமக்கு உள்ளது. சாவுத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து முற்றாக நீக்க வேண்டும் என்ற மனித உரிமைக் கடமையும் நம் முன் உள்ளது.

எனவே, தமிழின உணர்வாளர்கள், மனித உரிமையில் அக்கறையுள்ளோர் அனைவரும் கோவையில் பெருந்திரளாகக் கூட வேண்டும். நமது கோரிக்கைகளில் உள்ள நியாயம் அக்கோரிக்கையை ஏந்தி நிற்கும் மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கைக்கு ஏற்பவே மதிக்கப்படும். எனவே, மாநாட்டுக்கு வாருங்கள் தமிழர்களே என தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் பெ.மணியரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# காளான் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாய பிரதிப் பணிப்பாளர் விரிவாக்க அலுவலகத்தின் காளான் வித்தி உற்பத்தி பகுதியினால் தற்போது காளான் வித்திகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கி.சிறீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

எனவே மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் விற்பனை நிலையத்தில் 200 கிராம் காளான் வித்தி பைக்கெற் ஒன்று 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அதனைப் பெற்று உற்பத்தியினை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# இனசமூகங்களுக்கு தீங்கிழைக்காமல் குர்பான் வழிபாட்டில் ஈடுபடவேண்டும்

## பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

ஏனைய இன சமூகங்களுக்கு தீங்கு இழைக்காமல் குர்பான் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அசாத் சாலி ஆகியோர் முஸ்லிம் சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு குர்பான் எனப்படும் மிருகங்களை பலியிடும் மத நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது ஏனைய இன சமூகங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் முஸ்லிம் மக்கள் செயற்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குர்பான் மிருக பலி வழிபாடுகளை நடத்தும் உரிமை முஸ்லிம்களுக்கு காணப்படுவதாகவும் அதனை எவராலும் தடுக்க முடியாது எனவும் பிரதி அமைச்சர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

குர்பான் வழிபாடுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஆதரவளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குர்பான் வழிபாடுகளை மேற்கொள்ளும் போது ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் 072-3007300 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

விஹாரைகளுக்கு, கோயில்களுக்கு அருகாமையில் குர்பான் வழிபாடு நடத்தப்படக் கூடாது எனவும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்ட வேண்டுமெனவும் பிரதி அமைச்சர்கள் முஸ்லிம் மக்களிடம் கோரியுள்ளனர். (4-2)

# கட்டுநாயக்க சம்பவம் தொடர்பான அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு

தனியார் ஓய்வூதியச் சட்டத்திற்கு எதிரான கட்டுநாயக்க முதலீட்டு வர்த்தக வலய ஊழியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்து தாக்கல் செய்யப்பட்ட 11 அடிப்படை உரிமை மனுக்கள் இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, நீதியரசர்களான ஜீ.ஏ.ரத்நாயக்க மற்றும் ஆர்.கே. சுரேஷ்சந்திர ஆகியோர் முன்னிலையில் மனுக்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் மேற்கொண்டு வருகின்ற விசாரணைகளை மேலும் ஒரு மாதத்திற்குள் நிறைவு செய்ய முடியும் என்று அரச தரப்பில் ஆஜரான சொலிஸிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் நிறைவடையும் வரை நீதிமன்றத்திற்கு தாம் சமர்ப்பிப்பதாக உறுதியளித்த இரகசிய அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது எனவும் சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டார்.

இதேவேளை, மனுதாரர்கள் சார்பில் பிரசன்னமாகிய சட்டத்தரணிகள், காயமடைந்த மனுதாரர்களுக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் சிலரின் அறிக்கைகள் இதுவரை நீதிமன்றத்திற்கு கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட ரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்து கொண்ட தமக்கு துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் நடத்தியதில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் 10 இலட்சம் ரூபா இழப்பீடு பெற்றுத் தருமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனடிப்படையில் சகல மனுதாரர்களையும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்மானித்தது.

கட்டுநாயக்க முதலீட்டு வர்த்தக வலய ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் சிலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# துப்பாக்கி பிரயோகத்துடன் தொடர்புடையவர்கள் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில ஒருவர் பலியானமை குறித்து வடகொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களுள் உப பொலிஸ் பரிசோதகரும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வட கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் ஒருவரை சூட்டுக்கு இலக்காகி பலியானமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலையில் 2011 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வி இ.செனற்ரனிஸ்கா -161 புள்ளிகள்
செல்வி ச.சயந்தினி -156 புள்ளிகள்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



(6696)

மேலும் இப்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை ஈட்டிய தி.சுதர்சன்-146, செ.குலோஜனா-143, சூ.எட்மன் சத்தியசீலன்-142, க.மதுஜா-139, ஞா.ரஜீன்-128, ர.அஜித்குமார்-126, ர.அம்சா-125, இ.இனுஷன்-124, த.றெக்சனா-123, வி.வாரணன்-122, சு.சுதர்சன்-120, றி.றெனோஜன்-117, இ.நிலக்சனா-115, இ.கிருசனன்-105, சு.கேசவன்-104, றோ.குருப்பிரகாஸ்-102 ஆகிய 16 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் கற்பித்த வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/பொலிகண்டி, இ.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை.


# சமையல் எரிவாயுவின் விலைகளை அதிகரிப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

சமையல் எரிவாயுக்களின் விலைகளை அதிகரிக்குமாறு லாப் கேஸ் நிறுவனம் நுகர்வோர் சேவை அதிகாரசபைக்கு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

இது குறித்து இறுதித் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நுகர்வோர் சேவை அதிகாரசபையின் விலை நிர்ணய குழு கூடி ஆராயவுள்ளதாக அதிகார சபையின் உயர் அதிகாரிருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சமையல் எரிவாயுக்களின் விலைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும் நிலையில் இந்த முறையும் சர்வதேச விலை கட்டமைப்புகளுக்கு அமைய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் படி கடந்த ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் உலக சந்தையில் நிலவிய சமையல் எரிவாயுக்களின் விலைகள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த காலப்பகுதியில் உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவின் விலையில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையின் உயர் அதிகாரி குறிப்பிட்டார்.

இறுதியாக கடந்த ஒகஸ்ட் மாதமே சமையல் எரிவாயுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. (4-2)

# அழகு நிலையங்களை சோதனையிடும் திட்டம்

நாட்டிலுள்ள அழகு நிலையங்களை சோதனையிடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் நாட்டிலுள்ள 57 ஆயிரத்துக்கும் அதிகமான அழகுக்கலை நிலையங்களை சோதனைக்குட்படுத்த திட்டமிட்டுள்ளதாக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த குறிப்பிட்டார்.

நேற்று முதல் ஒரு மாதகாலத்திற்கு இந்த திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார வைத்திய அத்தியட்சகர் ஊடாக இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஹேமந்த பெனரகம கூறினார்.

நாட்டிலுள்ள அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ளவையா என்பது தொடர்பிலும் இதன்போது பரிசோதிக்கப்படவுள்ளது.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என டாக்டர் ஹேமந்த பெனரகம கூறினார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்திலுள்ள மருந்தகங்களை பரிசோதிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு -14, கொழும்பு-13, கொழும்பு -04இல் உள்ள ஔடதப் பரிசோதனைகளை உள்ளடக்கிய மூன்று குழுக்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது சுமார் 20 மருந்தகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் உரிய முறையில் செயற்படாத மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் திரவியங்கள் மற்றும் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4-2)

# நல்லூர் வடக்கு வீதியை புனரமைக்க உள்ளூராட்சிசபை முன்வருவது அவசியம்

## விஜயகலா எம்.பி.கடிதம்

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதி சேதமடைந்து பள்ளமும் திட்டியுமாக காணப்படுவதனால் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த வீதியினை திருத்தி அமைக்க உரிய நடவடிக்கையினை யாழ். மாநகரசபை மேற்கொள்ள வேண்டும். இதற்கான உத்தரவினை பிறப்பிக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதி யாழ்.மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதி தற்போது பள்ளமும் திட்டியுமான நிலையில் சேதமடைந்துள்ளது. இந்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது குறித்து எனக்கும் முறையிடப்பட்டுள்ளது.

தற்போது கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுவதால் பெருமளவான பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து செல்கின்றனர். வீதி சேதமடைந்துள்ளமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இந்த வீதி கிரவல் மண்ணிட்டு செப்பனிட வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கையினை யாழ்.மாநகரசபை இதுவரை எடுக்கவில்லை.

எனவே, இந்த வீதியினை செப்பனிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் உங்களிடம் வேண்டிக் கொள்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

# மருத்துவ ஆய்வு நிலையத்தை மக்கள் தீ மூட்டி எரித்தனர்

(கொழும்பு)

கரந்தெனியாவில் வைத்தியர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருடைய மருந்து ஆய்வு நிலையத்திற்கு பிரதேச மக்கள் நேற்று முற்பகல் தீ வைத்துள்ளனர்.

இந்தக் கட்டடம் கரன்தெனிய பகுதியில் அமைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் தலையீட்டினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தின் ஒரு பகுதி தீயினால் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வைத்தியரின் கொலையுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் இதற்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# சர்வதேச தபால் சேவை கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச தபால் சேவைகளுக்கான கட்டணம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச தபாலின் ஊடாக அனுப்பப்படும் பொதிகளின் எடைக்கேற்ப கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் ஆர்.டி.சி.காமினி தெரிவித்தார்.

இது தொடர்பில் அனைத்து தபால் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளதாக அவர் கூறினார்.

முன்னர் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்த நாடுகள் தற்போது மக்களின் நன்மைகருதி எட்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டுத் தபால்கள் இதுவரை காலமும் 10 கிராம் எடைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. திருத்தங்கள் மேற்கொண்டதன் பின்னர் தற்போது 20 கிராம் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (4-2)

# இலங்கை அரசை காப்பாற்ற அங்கு விஜயம் செய்யவில்லை

## சுதர்சன நாச்சியப்பன் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவில்லை என காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இலங்கைக்கு விஜயம் செய்தோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிங்கள ஆதரவாளர்கள் என குற்றம் சுமத்தப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருவதாக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (4-2)

# சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

தமது சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்காத எட்டு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

குறித்த உறுப்பினர்கள் தொடர்பில் அவர்களது விடயங்களை தெளிவுபடுத்தவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கின்றார். அத்துடன் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்காத குறித்த உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்தது.

தமது அறிவிப்புக்கு அமைய சொத்துக்கள் தொடர்பான தகவல்களை பலர் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திடம் சமர்ப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# கண்டி முன்னாள் மேயருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

(கொழும்பு)

பொதுப்பணத்தை தவறாக கையாண்ட குற்றச்சாட்டின் பேரில் தண்டனை வழங்கப்பட்ட கண்டி முன்னாள் மேயர் கேசர சேனாநாயக்க ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிவானால் விடுதலை செய்யப் பட்டார்.

தாய்ப்பேயில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற சர்வதேச உள்ளூராட்சி அரசாங்க சபைகளின் ஆசிய பசுபிக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக ஒரு தொகை பணத்தை பொதுப்பணத்தை முன்னாள் மேயர் தவறாகப் பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாக காணப்பட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டத்தின் கீழ் அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 2 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அவ்வாறு மேலதிகமாக விதிக்கப்பட்ட அபராதத் தொகை செலுத்தத்தவறின் மூன்று மாதங்களுக்கு சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேல் நீதிமன்றத்திலும் மேன் முறையீட்டு நீதிமன்றத்திலும் கேசர சேனாநாயக்காவினால் தொடுக்கப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த நிலையில் ஜனாதிபதி அவருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார். (4)

# கடந்தகால தேர்தல்கள் தொடர்பில் ஆராய முடிவு

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த தேர்தல்கள் தொடர்பிலான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாக்களிப்பு நடவடிக்கைகள் அதனுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதி தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்காலத்தில் வாக்களிப்பு நடவடிக்கைகளை செயற்றிறனுடனும் நியாயமாகவும் மேற்கொள்வதற்கு உகந்த திட்டங்களை தயாரிப்பது இதன் முக்கிய நோக்கமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைக்காக மாகாண மட்டத்தில் பிரதேச தேர்தல் உத்தியோகத்தர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு இதன் முதலாவது பிரதேச அமர்வு இம்மாதம் மூன்றாம், நான்காம் திகதிகளில் நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

இதன்போது மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் தேர்தல் உத்தியோகத்தர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, காலி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறான பிரதேச கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (4-2)

# தந்தை செல்வாவின் சிலையழிப்பு காட்டுமிராண்டித்தனமான செயல்

## மனோகணேசன் கண்டனம்



(கொழும்பு)

திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலையின் தலைப்பகுதி நேற்று முன்தினம் இரவு உடைத்து சேதமாக்கப்பட்டிருப்பது திருகோணமலையிலிருந்து முழுமையான நிர்வாகத்திற்குள்ளிருக்கும் நகரில் நடத்தப்பட்டுள்ள இந்த காட்டுமிராண்டித்தனமான செயல் எம்மை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருக்கின்ற தமிழர்களின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார அடையாளங்கள் அனைத்தையும் அழிக்கும் பேரினவாத நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தந்தை செல்வா தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட ஒடுக்கு முறைகளுக்கு எதிராக சாத்வீக போராட்டத்தை முன்னெடுத்த பெருந்தலைவராவார்.

மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிப்பிற்கு எதிராக கிளர்ந்து எழுந்தவர் ஈழத்து காந்தி என்று போற்றப்படும் தந்தை செல்வா அவர்களை இலங்கையில் வாழ்கின்ற எல்லாத் தரப்பு தமிழ் மக்களும் தேசிய தலைவராக ஏற்றுக் கொண்டு போற்றி வணங்குகின்றார்கள் என்றார். (4-2)

# வாகன ஓட்டுநர்களுக்கு வருடாவருடம் கண்பரிசோதனை கட்டாயமானது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

வாகனம் ஓட்டுநனர்கள் வருடந்தோறும் கண் பரிசோதனையை மேற்கொள்வது கட்டாயமாக்கப்படுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

உலக கண் பார்வை தினத்தை முன்னிட்டு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஆய்வுகளின் படி அதிகளவிலான வீதி விபத்துக்கள் கண்பார்வை குறைபாடு காரணமாகவே ஏற்படுகின்றது. அதனால் கண் பார்வை தொடர்பாக பரிசோதனைகளை வருடந்தோறும் வாகன ஓட்டுநர்கள் மேற்கொள்வதற்கான புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வருடாந்தம் கண்பார்வை தொடர்பான பரிசோதனைகளை வாகன ஓட்டுநர்களை மேற்கொள்ளச் செய்வதன்மூலம் கண் பார்வை குறைவு தொடர்பாக ஏற்படுகின்ற வீதி விபத்துக்களைக் குறைக்க வேண்டும்.

ஒருசில தொழில் வழங்குநர்கள் தங்களது வாகன சாரதிகள் ஓய்வெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் மிக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்கின்றனர். ஒரு போது ஒரு சில வாகன ஓட்டுநர்களின் உடல் சோர்வு காரணமாக தூக்கத்தை தழுவுகின்ற போது வீதி விபத்துக்கள் ஏற்படுவதைச் சுட்டிக் காட்டும் அமைச்சர் வாகனச் சாரதிகள் முடிந்தளவு ஓய்வெடுத்துச் கொள்ள வேண்டுமெனவும் பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சாரதிகள் கூடிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (4-2)

# இலங்கைக்கு உரித்தான உலக மரபுரிமை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கே உரித்தான உலக மரபுரிமைகளின் தற்போதைய எல்லைகள் தொடர்பான அறிக்கையொன்றை யுனஸ்கோ அமைப்பிடம் கையளிப்பதற்கு தேசிய மரபுரிமை அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் இருந்தவாறே இலங்கைகே உரித்தான உலக மரபுரிமைகள் காணப்படுகிறதா என்பதை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க குறிப்பிட்டார்.

உலக மரபுரிமை அமைந்துள்ள பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் மற்றும் அதன் பரப்பளவுகள் தொடர்பில் யுனெஸ்கோ அமைப்பு குறித்த நாடுகளிடம் வருடாந்தம் ஆராய்வதாக அவர் கூறினார்.

உலக மரபுரிமைகளின் எல்லைகள் மாற்றமடைந்திருந்தால் குறித்த பகுதிகள் யுனெஸ்கோ அமைப்பின் உலக மரபுரிமைகள் பட்டியலில் இருந்து அகற்றப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் எட்டுப் பகுதிகள் உலக மரபுரிமைகளாக பெயரிடப்படவுள்ளன.

அவற்றுக்கு நாட்டின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆறு இடங்கள் அடங்குவதாக தேசிய மரபுரிமை அமைச்சின் செயலாளர் கூறினார்.

சிகிரியா, தம்புள்ளை விஹாரை, காலி, கோட்டை, அனுராதபுரம், பொலனறுவை மற்றும் கண்டி ஆகிய இடங்கள் கலாசார பகுதிகளாக பெயரிடப்பட்டுள்ளன.

ஹோட்டன் சமவெளி மற்றும் சிங்கராஜ வனம் ஆகியன நாட்டிலுள்ள இயற்கையான உலக மரபுரிமைகள் எனத் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க மேலும் தெரிவித்தார். (4-2)

# சரத் என் சில்வா குறித்து ஆராய குழு அமைப்பதற்கு பிரேரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பதவியிலிருந்த போது நடந்து கொண்ட விதம் குறித்து ஆராயவென பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதற்கான பிரேரணை எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான யோசனை பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை கொண்டுவரவென 70 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பதிவியிலிருந்த போது நடந்து கொண்ட விதம் குறித்து ஆராய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஜனக பிரியந்த பண்டார ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தொடர்பில் ஆராய பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்க அரசியல் யாப்பு சட்டத்தில் இடமில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கடந்த 30 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மிகத் தெளிவாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# அனர்த்த பாதுகாப்புக்கு முகாமைத்துவ திட்டங்கள் தேவை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படாதிருக்க பொதுமக்கள் உரிய வழிவகைகளை இனங்கண்டு அவற்றை சீர் செய்வதன் மூலம் அனர்த்தங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மன்னார் மார்வட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்தும் வைகயில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் பருவமழை ஆரம்பித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதற்காக நாம் முன்கூட்டியே சில ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை இனங்கண்டு அந்நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை சிரமதானம் மூலம் மேற்கொள்ள வேண்டும். அப்போது வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் அதேவேளை டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

இது விடயத்தில் அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். மேற்படி திட்டத்தை ஒழுங்காக செயற்படுவதன் மூலம் அனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# முதலாளித்துவ நாடுகள் பலவீனமான நாடுகளிடையே அதிகாரம் செலுத்துகின்றன

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



முதலாளித்துவ நாடுகள் தங்களது நிர்வாணத்தை மறைத்துக் கொள்ள மனித உரிமைகளை காரணம் காட்டி பலம்பொருந்திய நாடுகள் ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பலவீனமான நாடுகளின் மீது பலம் பொருந்திய நாடுகள் அதிகாரத்தை பிரயோகிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

வெனிசுலா ஜனாதிபதி ஹியுகோ சாவேஸை பாராட்டும் வகையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முதலாளித்துவ நாடுகள் பல்வேறு வழிகளில் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் உலக சமூகம் வெட்கமின்றி இதனை வேடிக்கை பார்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

முதலாளித்துவ நாடுகள் தங்களது பிரச்சினையை மறைத்துக் கொள்ள மனித உரிமைகளை காரணம் காட்டி பலவீனமான நாடுகளின் மீது தாக்குதல் நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ படையினர் மூவம்பர் கடாபியை நடத்திய விதம் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த கைதிகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று சர்வதேச விதிகளை மீறி நேட்டோ படையினர் செயற்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகலவிதமான சர்வதேச பிரகடனங்களையும் மீறி நேட்டோ படையினர் கடாபியை படுகொலை செய்துள்ளனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்னமும் சில சர்வாதிகாரிகள் உலகை ஆட்சி செய்து வருவதாகவும் அவர்கள் மேற்குலக சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் ஆட்சி நடத்தி வருவதனால் நெருக்கடிகளை எதிர்நோக்குவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# அளவ்வ விபத்து தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க முடிபு

அளவ்வ புகையிரத விபத்து தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கை நேற்றுமுன்தினம் போக்குவரத்து அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பில் பல்வேறு பிரிவுகளிடம் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக புகையிரத திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.


குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி மாலை புகையிரதங்கள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட இந்த விபத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்தனர்.

அத்துடன் 30 இற்கும் அதிகமானவர்கள் குறித்த விபத்தில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# குருவின் பார்வையில்

## பொருளாதாரத்தில் கலாசாரம்



ஆன்மீகம் 21

ஒரு நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை என்பது ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. ஒருமுறை உயர்ந்த நிலையிலும், இன்னொருமுறை தாழ்ந்த நிலையிலும் இன்னொரு முறை அதற்கு இடைப்பட்ட நிலையிலும் இருக்கிறது. பொருளாதாரத்தில் மாற்றங்கள் நிகழும் போதெல்லாம் அதற்கேற்ற விதமாக கலாசாரத்திலும் மாற்றங்கள் இயல்பாகவே நிகழும். பொருளாதாரம் உயர்வாக இருக்கும் பொழுது கலாசாரம் ஒருவிதமாகவும் பொருளாதாரம் தாழ்ந்த நிலையில் இருக்கும் போது கலாசாரம் இன்னொரு



விதமாகவும் இருக்கும். உதாரணமாக கோவிலில் பூஜை செய்தால், ஒரு தேங்காயை உடைக்க வேண்டுமென்று ஒரு கட்டத்தில் சொன்னார்கள். பொருளாதார நிலை மேம்படும் போது 101 தேங்காயை உடைக்கிறார்கள். ஆனால், பொருளாதாரம் தாழ்வாக இருக்கும் போது ஒரு தேங்காயே போதும் என்கிறார்கள். பொருளாதாரம் இன்னும் தாழ்வானால், ஒரு தேங்காய் உடைப்பது கூடத்தேவையில்லை, அவ்வாறு கற்பனை செய்து கொண்டாலே போதுமென்று மாற்றிக் கொள்கிறார்கள். அல்லது எலுமிச்சம் பழத்தை வைத்துப் பூஜித்தால் போதுமென்று சொல்கிறார்கள். இவ்வாறாக கலாசாரத்திலும் பொருளாதார சூழ்நிலைக்கேற்ப மாற்றங்கள் தொடர்ந்து நடக்கிறது.

கலாசாரம் என்பது நிலையான ஒன்றல்ல என்பதை நாம்புரிந்து கொள்ள வேண்டும். கலாசாரம் என்பது திடமானதல்ல. அது திரவம் போல, கலாசாரத்திற்கென எந்த வடிவமும் இல்லை. சூழ்நிலை எப்படி இருக்கிறதோ அதற்கேற்ப தன் வடிவத்தை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு கலாசராத்திற்கு இருக்கிறது. அதில் தொடர்ந்து மாற்றங்கள் நடந்து கொண்டேதான் இருக்கும், இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அதன்போக்கை ஓரளவுக்கு நாம் நிர்ணயிக்கலாம். ஆனால், அதன் மீது முழுக் கட்டுப்பாட்டினை கொண்டுவர முடியாது. வெளிச்சூழ்நிலையும், பொருளாதார சூழ்நிலையும் மாறும் போது கலாசாரநிலையும் மாறிக் கொண்டே இருக்கும்.

தற்போது நம் தேசத்தில் பொருளாதார ரீதியான புத்துணர்வு நடந்திருப்பதால், கலாசாரத்திலும் பெருமளவு மாற்றம் நிகழ வாய்ப்பிருக்கிறது. இந்த நேரத்தில்தான் கலாசாரத்தில் நன்மையளிக்கக் கூடிய தன்மைகள் பலவும் உள்ளதென்பதைப் பார்க்க வேண்டும். அதன் தன்மைகள் தொலைந்து போகாமல் அதற்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. ஆனால், மாற்றங்கள் நிகழ்வதைத் தடுக்க முடியாது. பொருளாதாரத்திற்கு ஏற்ப கலாசார மாற்றங்கள் உலகின் பல கலாசாரங்களிலும் நடந்திருக்கிறது.

70 வருடங்களுக்கு முன்பாக அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. மக்களுக்கு உண்ண உணவும் கூட கிடைக்கவில்லை. பணம் சம்பாதிக்க மக்கள் பல வழிகளிலும் முயற்சித்தார்கள். ஒரு பெண்மணியும் பணத்திற்காக முயற்சி செய்தாள். அப்போது இந்தப் பெண்ணின் நிலையைக் கண்ட ஓர் இளைஞன் "நீ எனக்கு நூறு முத்தங்கள் கொடுத்தால் நான் 1000 டொலர் தருகிறேன்" என்றான். அந்தப் பெண்மணி இருந்த சூழலில் 1000 என்பது மிகப்பெரிய தொகையாக இருந்ததால், அவளும் ஒத்துக்கொண்டு அந்த இளைஞனுக்கு முத்தம் கொடுக்கத் தொடங்கினாள். 50 முத்தங்கள் பெறும் வரை அமைதியாக இருந்த அந்த இளைஞன், பின்னர் ஒவ்வொரு முத்தம் பெறும்போதும் பயத்தால் நடுங்கினான். 70 முத்தங்கள் கொடுத்தபின் அந்தப்பெண், "ஏன் இப்படி பயத்தால் நடுங்குகிறாய்?" என்று கேட்டாள். அந்த இளைஞன் "நூறாவது முத்தத்திற்கு நெருக்கமாக வர வர எனக்கு பயம்அதிகாமாகிக் கொண்டேயிருக்கிறது. ஏனென்றால், என்னிடம் 1000 டொலர் பணம் இல்லை" என்றான். எனவே பொருளாதார மாற்றங்கள் நிகழும்போது கலாசாரத்திலும் தீவிரமான மாற்றங்கள் ஏற்பட்டு மக்கள் பாதிப்படைய வாய்ப்பிருக்கிறது. தற்போது நம் தேசத்தில் பொருளாதார வளர்ச்சி வெகுவேகமாய் நடந்திருக்கிறது. இந்தத் தருணத்தில் கலாசாரத்திலுள்ள அற்புதமான தன்மைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், இந்த மாற்றத்தின் காரணமாக நமக்குத் தெரியாமலேயே நன்மையான விடயங்கள் அனைத்தையும் இழந்து விடுவோம். இது அடுத்த தலைமுறைக்கு பாதிப்பான சூழ் நிலையை உருவாக்கிவிடும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும் 01

மனதை இறைவன்பால் இசைவிப்பது இசையாகும். இவ்விசையையே நாம் சங்கீதம் என்கின்றோம். உலகம் எப்போது தோன்றியதோ அப்போதே சங்கீதம் தோன்றியது எனலாம். உலக உயிரினங்கள் யாவும் இன்புற்று வாழவும் குறிப்பாக மக்கள் வாழ்வாங்கு வாழவும் வாழ்வு பண்பாடாக அமையவும் அப்பண்பாடு வழியாக கலாசாரத்தைப் பேணவும் சங்கீதம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். சங்கீதம் ஓம் என்ற ஒலியின் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. சங்கீதத்திற்கு அடிப்படை ஓங்காரம் எனும் நாதமாகும். மக்கள் இறைவனுடன் இணைவதற்கு முதற்படியாக அமைவது சங்கீதமாகும். மக்கள் இவ்வுலகில், உலகோடு இசைந்து வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியைத்தருவதே சங்கீதத்தின் நோக்கமாகும் இதனாலேயயே இறைவனுக்கு இசைப்பிரியன், சாமகானப்பிரியன், இராகப்பிரியன், நாதரூபன் போன்ற பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இவ்விசைச் சங்கீதம் இரண்டாக வகுக்கப் பட்டுள்ளது.

1) மிடற்றிசை 2) கருவிஇசை

எமக்குள்ளே இருந்து மிடறு மூலம் பாடப்படும் இசை மிடற்றிசையாகவும் நாம் எமது அங்கங்களைக் கொண்டு கருவிகளின் மூலம் வாசிப்பது கருவி இசை எனவும் வழங்கப்படுகின்றது.

சங்கீதத்தின் வளர்ச்சிப்பகுதியில் முதல் முன்னோடியாக அமைவது, நாட்டுப்பாடல்கள் எனலாம். இந்த நாட்டுப்பாடல்கள் யாரால், எப்போது இயற்றப்பட்டன என எவருக்கும் தெரியாது. மக்களின் அன்றாட வாழ்க்கையின் சமூகப் போராட்டங்களிலிருந்தும் சுற்றுப்புறச்சூழல் நிகழ்வுகளில் இருந்தும். மலரும் முழுமையான உணர்வின் ஊற்றுத்தான் நாட்டுப்புறப் பாடல்கள். நாட்டுப்புறப்பாடல்களுக்கு மூவகை நிலைகளும் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் தம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொட்டில் முதல் அதாவது குழந்தை பிறந்தது முதல், அது வாழ்ந்த வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இன்பம், துன்பம், ஏக்கம், ஏமாற்றம் என அனைத்து உணர்ச்சிகளையும் கூட்டி அவ்வுணர்ச்சிகளோடு ஒன்றிப் பாடல்களைப்பாடினர். அதுவே நாட்டுப் பாடல்காளாகும். இப்பாடல்கள் கள்ளங்கபடமற்றவை. கள்ளங்கபடமில்லாத மனத்தோடு உண்மையுாகப்பாடப்படும் பாடல்ளாகும். இந் நாட்டார்பாடல்கள் எளியவை, பகட்டில்லாதவை, பரிசுத்தமானவை, கள்ளங்கபடமற்றவை, நேராக உள்ளதை ஈர்க்கும் இனிமையும் இசைப்பொலிவும் நிறைந்தவை. செழுமை மிக்க மனோபாவமும் கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும் கொண்டவையாக விளங்குபவையாகும்.

இச்சிறப்புப் பெற்ற நாட்டவர் இசையை தொல்காப்பியர் பண்ணத்தி எனக் குறிப்பிடுகின்றார் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். "பாட்டிடைக் கலந்த பொருளாகி, பாட்டின் இயல் பண்ணத்தி இசையே" எனத் தொல்காப்பியர் பண்ணத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்.

நாட்டுப்பாடல் எழுதாமுறையில் வழிவழியாக காதால் கேட்டு பல பாடப்பட்டு வந்தது. மக்கள் இலக்கியமாக நாட்டுப்பாடல் ஏட்டிலும் இல்லாத வாய்மொழி இலக்கியமாக வழங்கி வந்தபோதிலும் இவற்றின் கவிச் சிறப்பைப் போலவே இவற்றின் இசைச் சிறப்பும் பல நூற்றாண்டுகளாக மக்களால் பாடப்பட்டு வருகின்றது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

நாட்டுப்புறப்பாடல்களில் புன்னாக வராளி, நாதநாமக்கிரியை, ஆனந்த பைரவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நவரோஜ், நீலாம்பரி, போன்ற இராகங்கள் காணப்படுகின்றன.

உதாரணம்:

ஆராரோ ஆரிவரோ  
ஆராரோ ஆரிவரோ  
கண்ணே என்கற்பகமே  
கண்மணியே கண் உறங்கு  
மாமன் அடித்தாரோ  
மல்லிகைப் பூச்செண்டாலே  
அத்தை அடித்தாளோ  
அரளிப்பூச் செண்டாலே

கிராமப்புறங்களில் இன்றும் பாடப்படுகின்றன.

"சாய்தாடம்மா சாய்ந்தாடு", "கைவீசம்மா கைவீசு" போன்ற குழந்தைப்பாடல்கள் சங்கராபரண இராகத்திலேயே பாடப்பட்டு வருகின்றன. இது ஒரு பழமையான இராகம். இப்பாடல்கள் கிராமப் புறங்களிலே இன்றும் காணப்படுகின்றன.

திருமதி மலர்விழி கனகசபை

இதே போல தொழிற் பாடல்  
சிந்து பைரவி இராகம்-  
இடுப்புத் பெருத்தவரு இடவாகு போட்டவரு  
பாதம் சிறுத்தவரு பாதை வரப் பார்த்தியளா  
மாதுளம்பூ பூப் பூப்புக்கும் மாதமொரு காய் காய்க்கும்  
எம்மனசு விட்டுச்சொன்னாக்கா  
உங்க மதி வதனம் வாடுமென்று

(தொடரும்)

# வக்ர கிரகம் என்ன செய்யும்?

நேராக இல்லாத எதையும் வக்ர கிரகம் என்று சொல்லுவார்கள்.

அஷ்ட வக்ரன் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதாவது எட்டுக் கோணல். இப்போது கிரகம் வக்ரம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

பொதுவாக எல்லா கிரகங்களும் நேர் வழியில் தன்னுடைய பாதையில் வான மண்டலத்தில் சஞ்சரித்து வரும்.

ஆனால்,

சாயக்கிரகங்கள் என்று சொல்லப்படும் கரும்பாம்பு, செம்பாம்பு அதாவது இராகு, கேது எதிர்ப்புறமாக தம்முடைய பாதையில் எப்போதும் சென்று கொண்டிருக்கும்.

எனவே,ஏனைய கிரகங்களுக்கு குறிப்பிட்ட காலம் வரையில் வக்ரகதி என்றால் இந்த இராகு கேதுவுக்கு என்றுமே வக்ரம் தான்.

ஆக,எஞ்சியுள்ள 7 கிரகங்களுள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் வக்ரமில்லை.

ஏனெனில் சூரியனுடைய சஞ்சரித்தில் தான் தீட்சனியத்தால் ஏனைய 5 கிரகங்களுள் வக்ரம் அடைகின்றன.

சாதாரணமாக சூரியனை அண்டியுள்ள சுக்ரன், புதன் ஆகிய கிரகங்கள் சூரியனுடன் பெரும்பாலான காலங்களில் ஒன்று கலந்து வருவதால் அஸ்தங்க தோஷம் ஏற்பட்டு வருகிறது.

ஆகவே இக்கிரகங்களில் வக்ரகாலத்திற்கு யாரும் முக்கியத்துவம் தருவதில்லை.

அடுத்தபடியாக உள்ள செவ்வாய் வக்ர கதி அடையும் போது கெட்ட இடங்களில் இருந்தால் உலகத்தின் பல பாகங்களில் வெள்ளம், புயல், பூகம்பம், தீ விபத்து முதலியவை ஏற்பட்டு மக்கட் சேதம் அதிகரித்து காட்டும்.

செவ்வாய்க்கு 4 இல் சனி இருந்தாலும் சனிக்கு 4 இல் செவ்வாய் இருந்தாலும் அந்தந்த நாட்டு லக்ன விசேஷத்தின் படி இப்பலன் ஏற்படும்.

வக்ரமடைந்த செவ்வாயோடு சனி சேர்ந்தாலோ அல்லது பார்த்தலோ கூட இப்படிப்பட்ட பலன்கள் ஏற்படுவதுண்டு.

இதுபோலவே, சனிவக்ரம் அடைந்திருக்கும்போது சனியுடன் செவ்வாய் சேர்ந்தாலோ அல்லது பார்த்தாலோ கூட மேலே செல்லப்பட்ட பலன்கள் ஏற்படுவதுண்டு.

வக்ரமடைந்துள்ள செவ்வாயை குரு பார்த்தால் உலகத்தில் மக்கட் சேதம் குறைவுபடும்.

மேலே செல்லப்பட்ட பலன்கள் கோசார காலத்தில் செவ்வாய் வக்ரம் அடைந்தால் ஏற்படும் பலன்கள் ஆகும்.

ஒருவருக்கு ஜனன காலத்தில் 2,3,4 முதலிய இடங்களில் செவ்வாய் வக்ரத்தில் இருந்து பாப கிரகங்களில் பார்வைக்கு உட்பட்டிருந்தால் அந்த ஜாதகரின் அவயவங்களில் ஏதாவது குறைந்திருக்கும்: அல்லது காயவடு ஏற்பட்டிருக்கும்.

வக்ரமடைந்துள்ள செவ்வாயும் தெசா புத்தி காலங்களிலும் காயவடு ஏற்படக் கூடிய சூழ்நிலை உண்டாகும்.

ஜனன காலத்தில் வக்ரமடைந்துள்ள செவ்வாயை குரு பார்த்தால் மேற்படி காயவடு ஏற்பட காரணமில்லை.

கோள்களில் மிகப் பெரியதான சனி என்னும் கோள் வக்ரமடைவதுண்டு.

ஜனன காலத்தில் ஒருவருக்கு 3-6 முதலிய இடங்களில் சனி வக்ரமடைந்து காணப்பட்டால் சனி தெசா புத்தி காலங்களில் அந்த ஜாதகருக்கு பல மேன்மையான பலன்கள் ஏற்படும்.

1-4-7-10 முதலிய கேந்திர ஸ்தானங்களில் சனி வக்ரமடைந்து காணப்பட்டால் அந்த ஜாதகருக்கு கோசார ரீதியில் சனி வக்ரமடைந்தால் தொல்லைகள் பல ஏற்படுத்தக் கூடும்.

கோசாரத்தில் 2-12 முதலிய இடங்களில் சனி இருந்தால் அதை ஏழரை நாட்டு சனி என்று சொல்லுவதுண்டு. (இங்கே இராசி , லக்கினம் இரண்டுக்கும் சொல்லப்படுகின்றது.)

இத்தகைய ஏழரை நாட்டு சனி காலத்தில் சனி வக்ரமடைந்தால் சில முக்கிய நண்பர்கள் பிரிவினையும் சிலரால் ஏமாற்றப்படுவதும் எப்போதும் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படுவதுமான ஜாதகர் இருந்து வருவர்.

ஜனன காலத்தில் சனி 3-6 இடங்களில் உச்ச ஸ்தானத்தில் காணப்பட்டால் இப்பலன்கள் குறைந்து வரும்.

குரு பார்வை ஏற்படுமாயின் இப்பலன்கள் குறைந்து விடும்.

பொதுவாக சனி இருக்கும் இடத்துக்கு 5 ஆம் இராசியில் சூரியன் வரும் மாதத்தில் சனி வக்ரமடைவதுண்டு. சனி இருக்கும் இடத்துக்கு 9 ஆம் இராசியில் சூரியன் வரும் போது சனிக்கு வக்ர நிவர்த்தியாகும்.

எனவே சுமார் 5 மாத காலம் வக்ரத்தில் பின்நோக்கி செல்லும் சனி தனக்கு 12 ஆம் இடத்தையும் சில காலம் பிடித்து விடுவதுண்டு. இதுபோன்ற சமயங்களில் பூர்வத்தில் எந்த இடத்தில் இருந்ததோ அதேபலனை செய்யாமல் வக்ரத்தில் எந்த இராசியை பிடிக்கிறதோ அந்த இராசிக்குரிய பலனை வலுவாகச் செய்யும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

சில இடங்களில் தான் சனி வக்கிரித்துப் பின் இராசியை பிடித்து வரும் என்பதை உணரவும்.

ஒரு கிரகம் வக்ரம் அடைந்தால் தான் உச்சமடைந்திருக்கும் போது எவ்வளவு வலுக்கொண்டதாக செயற்படுமோ அதே வலுவுடன் தான் வக்ரத்திலும் செயற்படும் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

ஆகவே,

இயற்கை பாவிகளாக சனி, செவ்வாய் முதலிய கிரகங்கள் கெட்ட இடத்தில் வக்ரம் அடைந்தால் அதிக தீய பலன்களை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

இனி சுப கிரகமான குரு பகவான் வக்ரத்தில் சஞ்சரிக்கும் போது என்ன செய்கிறார் என்று பார்க்கலாம்.

சனிக்கு சொல்லியது போலவே குருவிற்கும் இராசி முதல் 5 ஆவது இராசியில் சூரியன் வரும் போது குரு வக்ரமடைந்து 9 ஆவது இராசியில் சூரியன் வரும் போது வக்ர நிவர்த்தியாகிறது.

குருவும் வக்ர கதியில் தனக்கு பின்னுள்ள இராசியை சில சமயம் பிடிப்பதும் அதே இராசியில் சில சமயம் வக்ர நிவர்த்தியாவதும் உண்டு. ஆனால் குரு வக்ரகதியில் பின் இராசியைப் பிடித்தாலும் தான் இருந்த பூர்வ இராசியின் பலனையே வழங்கும் என்பது ஜோதிட சாஸ்திரத்தின் கருத்து.

ஏனைய கிரகங்களுக்கு இல்லாத ஒரு விசேடம் குருவுக்கு இருப்பதை நாம் இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

அதாவது வக்ரத்திலுள்ள குரு பின் இராசியைப் பிடிப்பது போன்று தனக்கு முன்னாள் உள்ள இராசியை சில சமயம் பிடித்துவிடும்.

இது வக்ரமல்ல: அதிகார ஓட்டம்

அதிகார ஓட்டத்தில் முன்னால் ஓடினாலும் தான் பூர்வத்தில் எந்த இடத்தில் இருந்ததோ அந்த இடத்தின் பலனையே குரு வழங்குவார் என்பது குறிப்பு.

சுப கிரகமான குரு வக்ரமடைந்தாலும் தான் உச்ச இராசியில் இருக்கும் போது வழங்கும் வலுக்கொண்ட பலனையே வழங்குவார்.

வக்ரமடைந்த சனி அதிக பாவ பலனை வழங்குவது போல வக்ரமடைந்த குரு அதிக சுபபலனை வழங்குவார். ஆனால் ஜனன காலத்தில் குரு கெட்ட ஆதிபத்தியம் பெற்றிருந்தாலும் நீசப் பகை இராசி பெற்றிருந்தாலும் கோசாரத்தில் வக்ரமடையும் குரு சுப பலனை செய்யாது: கெடு பலனும் செய்யாது.

ஜனன காலத்தில் 2,5,9,11 முதலிய இடங்களில் இருக்கும் குரு கோசார இராசியில் 3,6,8,12 முதலிய இடங்களில் இருந்தாலும் வக்ரமடையும் போது உச்ச இராசியில் இருக்கும். வலு இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக உண்டு.

ஆனால்நீசத்தில் வக்ரம் பெறும் கிரகம் சுப கிரகமானால் நற்பலனும், பாப கிரகமானால் அதிக தீயபலனும் ஏற்படுத்தும்.

ஜோதிடக் களம்

## தலைமைப் பதவி பறிபோகும் அச்சத்தில் வெளிநாட்டு பயணத்தை தவிர்க்கும் ரணில்

(கொழும்பு)

தலைமைப் பதவி பறிபோகும் என்ற அச்சம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு பயணங்களை இரத்து செய்து வருவதாக தினமின பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர் பதவியை வழங்கி விட்டு செல்வதற்கு விசுவாசமானவர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் வெளிநாட்டுப் பயணங்களை இரத்து செய்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக முக்கிய வெளிநாட்டு பயணங்கள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக தினமின தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இணைப் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் தலைமைப் பதவியை பறிப்பதற்கு ஆர்வம் காட்டி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

ரணில் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளும் போது சதித்திட்டத்தின் மூலம் கட்சித் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்வதற்கு கிளர்ச்சிக் குழுவினர் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-2)

## கோஷ்டி மோதலில் ஒருவர் பலி; ஆறு பேர் காயம்

வாதுவை தெல்துவ என்ற இடத்தில் இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட மோதலின் போது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலியானதுடன் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.30 அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 28 வயதுடைய சுரங்க பிரியதர்சன என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வாதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-2)

## இலங்கையின் அரசியலில் பாதாள கோஷ்டியினர்
### அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)



பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அரசியலில் பிரவேசித்துள்ளதாக மனிதவள அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

ரத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உழைக்கும் வர்க்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படும் எம்.ஜீ. மெண்டிசின் நூற்றாம் சிரார்த்த தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

மெண்டிஸ் பாதாள உலகக் கோஷ்டியினருடன் போராட்டம் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அரசியலில் தற்போது பாதாள உலகக் கோஷ்டியினர் பிரவேசித்து வருவதாகவும் இது மிகவும் வேதனையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில பாதாள கோஷ்டியினர் ஏற்கனவே அரசியலில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். இடதுசாரி இயக்கங்கள் என்ற ரீதியில் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு எதிராக செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டிகளுடன் இணைந்து அரசியல் நடத்த முடியாது என்பதனை அரசாங்கத்திற்கு புரிய வைக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# மாசுபட்ட பெற்றோலினை சந்தைப்படுத்த முயற்சி

## கனிய வள சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போது கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய கட்டடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மாசுபட்ட பெற்றோல் தொகையை சந்தையில் விநியோகிப்பதற்கு கனிய வளக் கூட்டுத்தாபனம் தயாராகி வருவதாக கனிய வள தொழிற் சங்க சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போது இது தொடர்பான கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபத்தின் தேசிய சேவையாளர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

கனிய வளக் கூட்டுத்தாபனத்தின் விநியோக பிரிவு முகாமையாளரினால் இந்தக் கேள்விப்பத்திரக் கோரல் தொடர்பில் பத்திரிகை அறிவித்தலும் கடந்த வெள்ளிக்கிழமை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் கொலன்னாவ கனிய வள களஞ்சியத்தில் உள்ள 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் ஒக்டென் 90 வகை பெற்றோலை விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து எரிபொருள் மாதிரியை கனிய வள களஞ்சிய உள்ளக அமைப்பின் பதில் செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக பெற்று கொள்ள முடியும் என அந்த பத்திரிகையில் தொலைபேசி இலக்கத்துடனான அறிவித்தல் வெளியாகியிருந்தது.

இது குறித்து கனிய வளத்துறை அமைச்சின் செயலாளர் சந்தியா விஜயபண்டார தெரிவிக்கையில்,

இதனை மறுத்த அவர் இவ்வாறானஎந்தவொருதிட்டமும்தங்களிடம் இல்லை என குறிப்பிட்டார். (4-2)

# மத்திய கிழக்கு நாடுகளின் யுத்த நிலைமையே எரிபொருள் விலை உயர்வுக்கு காரணம்

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் திடீரென எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டமைக்கு பிரதானமான இரு விடயங்கள் மூலகாரணமாக அமைந்ததென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் ஹெரி ஜயவர்த்தனவின் கையெழுத்திட்டு விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் நீண்ட காலமாக மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காணப்பீட்ட பிரச்சினை மற்றும் பொருளாதார சிக்கல் என்பவற்றால் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது.

அதேபோன்றே கடந்த காலங்களில் அதிக மழை கிடைக்காததால் நீர்மின் விநியோகம் குறைந்த நிலையில் மின்சாரம் தயாரிக்க மேலதிக எரிபொருளை நிவாரண நிலையில் மின்சக்தி அமைச்சுக்கு வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அதனால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கடன் சுமை அதிகரித்துச் சென்றது. எனினும் அந்த கடன் சுமையை மக்கள் மீது சுமத்தாதிருக்க அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்தது என்றார். (4-2)


## கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ/து)
## பார ஊர்திகள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கீழ்வரும் விபரப்படியான 02 (இரண்டு) பாரவூர்திகள் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றினை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறு விலையின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது கூறுவிலைகளை 15.11.2011 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,கரவெட்டி என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கூறு விலை கோரல்-பாரவூர்தி விற்பனை, பாரவூர்தி இலக்கம் என்பன எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| பாரவூர்தி இலக்கம் | மாதிரி |
|---|---|
| 24/ 4865 | இசுசு ரி எக்ஸ் டி 30 |
| என்.பி.எச்.கியூ 7375 | லங்கா அசோக் லேலண்ட் |

குறிப்பு:-

01) பாரவூர்தியின் செயற்படு தன்மைமையினை காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

02)நேரடியாக ஒப்படைக்கப்படும் கூறுவிலைகள் பொதுமுகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

03) கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

04) மேற்படி விளம்பரமானது 03.08.2011ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் 15.10.2011ஆம் திகதி திறக்கப்பட்டு இவை மதிப்பீட்டு பெறுமதிக்கு குறைவாக உள்ளமையால் அவை நிராகரிக்கப்பட்டு மீள விளம்பரம் செய்யப்படுகிறது என்பதனை அறியத் தருகின்றோம்.

28.10.2001

சி.நேசராசா
பொதுமுகாமையாளர்.

(சி-4874)


# பிரதம நீதியரசர் ஜனாதிபதிக்கு விசுவாசமுடையவர்-விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசுவாசி என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்புக்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு சரியான முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தற்போதைய பிரதம நீதியரசர் பக்கச் சார்பற்ற நிலையிலும், சுயாதீனமாகவும் செயற்படுவாரா என்பது சந்தேகமே என கொழும்பபைச் சேர்ந்த மனித உரிமைச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளதாக கொழும்பு டெலிகிராம் என்னும் இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதியின் குடும்பத்தார் சம்பந்தப்பட்ட வழக்குகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க காலத்தில் அரசியல் நியமனத்தின் மூலமே ஷிராணி பண்டாரநாயக்க உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)




★1570-வட கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக ஒல்லாந்தில் ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1834-முதன் முதலாக இந்தியாவில் இருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.

★1868-நியூசிலாந்து சீர் நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.

★1889-வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39ஆவது, 40ஆவது மாநிலங்களாக முறையே இணைந்தன.

★1899-தென்னாபிரிக்காவில் போவர்கள், பிரித்தானியர்கள் வசம் இருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.

★1914-ரஷ்யா ஒட்டோமான் பேரரசு மீது போரை அறிவித்தது.

★1917-பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.

★1930-ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.

★1936-இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி ரோம்-பேர்லின் அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.

★1936-பிபிசி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.

★1936- கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.

★1953-பாகிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★1963- தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோ டின் டியெம் இராணுவப் புரட்சியை அடுத்து உயிரிழந்தார்.

★1974-தென் கொரியத் தலைநகர் சியோலில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 78 பேர் உயிரிந்தனர்.

★2000-பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு முதன் முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.

★2006-பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

★1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது ஜனாதிபதி (இ.1849)

★1815- ஜோர்ஜ் பூல், ஆங்கிலேயக் கணிதவியலாளர் (இ.1864)

★1965- ஷாருகான், இந்தி நடிகர்.


### இறப்புக்கள்

★1903-பரிதிமாற் கலைஞர் வி.கோ. சூரியநாராண சாஸ்திரிகள், தமிழறிஞர். (பி.1870)

★1917-ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர். (பி.1858)

★1966-பீட்டர் டெப்ாய், நோபல் பரிசு பெற்றவர். (பி.1884)

★1978- ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர்.



★1950-ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோர்ஜ் பேர்னாட் ஷாவின் நினைவு தினம்.

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

5

ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்துப் போட்டது தான், நான் செய்த பெரும் பிழை. எவ்வளவோ அடி,உதை சித்திரவதைகளைச் சுமந்தவன் அன்றைக்கும் பல்லைக் கடித்தபடி அவர்களின் தாக்குதலைத் தாங்கி இருக்கலாம்; இல்லையேல்,அவர்களின் தாக்குதலில் உயிரையே விட்டிருக்கலாம். அன்றைக்கே மண்ணோடு மண்ணாகிப் போயிருந்தால், இன்று வரை மரணத்தின் துரத்தலுக்கு ஆளாகி தவித்திருக்க வேண்டியது இல்லை. ஒவ்வொரு நாளும் செத்துச் செத்துப்பிழைப்பதைவிட செத்து ஒழிந்து விடுவதே மேல்.

"ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்துப் போட்டதன் மூலமாக ராஜீவ் கொலை விவகாரத்தில் தனக்கு இருக்கும் பங்களிப்பை முருகன் ஒப்புக்கொண்டு இருக்கிறார்" என மீடியாக்களிடம் அறிக்கை வாசித்தார்கள் அதிகாரிகள். எத்தனையோ சித்திர வதைகளை நடத்தி, அவர்களின் புனை கதைகளுக்குக் கையெழுத்து வாங்கினார்கள் என்பது எங்களுக்குத்தான் தெரியும். பிரம்புகளின் பின்னனியில் எங்களிடம் கையெழுத்து வாங்கப்பட்ட அன்றைய சூழலில்கூட நான் சமயோசிதமாக ஒரு காரியத்தைச் செய்தேன். என் கையொப்பம் நான் விரும்பிப் போட்டது அல்ல என்பதை நீருபிக்க ஜ.பி.சி செக்ஷன் 29 மற்றும் இண்டியன் எவிடென்ஸ் ஆக்ட் செக்ஷன் 15ன்படி எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சான்றுக் குறியீடுகளைப்போட்டு வைத்தேன். அந்தக் குறியீடுகளைப்பற்றி என்னிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். அங்கும் அது கேட்கப்பட வில்லை.

"விசாரணையின் போது நடந்த சித்திரவதைகளைப் பற்றி நீதிபதியிடம் முறையிட்டிருக்கலாமே?" என்று சிலர் கேட்கிறார்கள். நியாயமான கேள்விதான். ஒரு எலியைப் பூனையின் காவலில் வைத்து விட்டு, அந்த எலியிடம் "பூனை உன்னைத் துன்புறுத்தியதா?"என வீட்டு எஜமான் கேட்டால் எப்படி இருக்கும்? அதுபோல்தான் அப்போது எமக்கு இருந்த நிலையும். அதிகாரிகளின் சித்திரவதைகளைப் பற்றி சொல்லிவிட்டு திரும்பவும் அவர்களின் பிடிக்குள் தான் நாங்கள் வரவேண்டும். அப்படியிருக்க வாய் திறந்த பாவத்திற்காக மேலும் தாக்குவார்களே... உடல் முழுக்கக் காயங்கள் இருந்தாலும் , வாய்விட்டுக் கதறக்கூட அப்போது எங்களுக்குத் தைரியம் இல்லை.

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, எங்களால், நீதிபதியின்

## ஒப்புதல் வாக்கு மூலம்... உலுக்கும் உண்மைகள்!

முகத்தைக்கூட தெளிவாகப்பார்க்க முடியவில்லை.தவறியும் அவர் எங்களையோ நாங்கள் அவரையோ பார்த்துவிடாதபடி 10-15 அதிகாரிகள் எங்களை வளையம் போல் சுற்றி நின்றனர். நீதிமன்றம் என்று கூட பார்க்காமல் "ஏதாச்சும் பேசினீங் கன்னா...!" என மிரட்டினார்கள். அதையும் மீறி என் மனைவி நளினி நீதிபதியின் முகத்தைப் பார்க்க போராடியபடி இருந்தாள். அடி, உதைகள் இல்லாத ஒரே இடம் எங்களுக்கு அந்தக் கூண்டுதான். எங்களின் சோகத்தைச் சொல்வதற்கான கடைசி வாய்ப்பிடமும் அதுதான். நீதிபதியைப் பார்க்க என் மனைவி போராடுவதும், அதிகாரிகள் சுற்றிச்சுற்றி அவரை மறைப்பதுமாக இருந்தார்கள். ஒரு கட்டத்தில், "அரசாங்க செலவில் எங்களுக்கு வக்கீல் நியமித்துக் கொடுங்க." என நீதிபதியிடம் கைகூப்பியபடி வேண்டினாள் நளினி. இத்தனை போராட்டங்களைக் கடந்து அந்தக் குரல் வருகிறது என்பதை அந்த நீதிபதி அறிந்திருக்க வாய்ப்பே இல்லை. "பார்க்கலாம்" என்றபடியே ஏதோ எழுதினார். ஆனால், அடுத்த ஒருவருடம் முடியும் வரை அதற்கான எந்த முயற்சியும் மேற் கொள்ளப்படவில்லை.

நீதிபதி முன் எங்களை ஆஜர்படுத்த அழைத்து வரும்போதெல்லாம் அதிகாரிகளின் பூச்சாண்டித்தனம் அப்பட்டமாகவே தெரியும். "நீதிபதியிடம் ஏதாவது சொன்னா , சண்முகத்திற்கு ஏற்பட்ட நிலமைதான் உங்களுக்கும்" என மிரட்டுவார்கள். அடி, உதைகள் வாங்கி மிரண்டு கிடக்கும் எங்களால் இதையும் தாண்டி என்ன பேசிவிட முடியும்!

03.08.91 அன்று ஒப்புதல் வாக்கு மூலத்தாள்களில் எனது கையொப்பத்தினைப் பெற்று விட்டு மறுநாள், எம்மை ஒருவர் முன் ஆஜர்படுத்தினார்கள். அதற்கு முன்னர் அவரை நான் பார்த்ததில்லை. சைதாப்பேட்டைச் சிறையில் சிறிய அறையில் ஒரு பக்கம் அரசு வக்கீலும் இன்னொரு பக்கம் வழக்கின் தலைமைப்புலனாய்வு அதிகாரியும் அமர்ந்திருந்தனர். புதுமுகமாகத் தெரிந்த அவர் தலை குனிந்தபடி எமது காவல் நீடிப்புத் திகதியைச் சொன்னார். உண்மையில் அவர்தான் நீதிபதி என்று எனக்குத்தெரியாது. அவர் உத்தரவிட்டது பொலிஸ்காவலுக்கா அல்லது நீதிமன்றக்காவலுக்கா என்பதும் எனக்கு விளங்கவில்லை. நான் நிறுத்தப்பட்ட இடம். ஒரு நீதிமன்றம் என்பது கூட எனக்குத் தெரியாது. அங்கே அப்படியொரு சூழ் நிலையும் இல்லை. எங்கே கொண்டு செல்லப் படுகிறோம் என்பதை அதிகாரிகள் தொடர்ந்து இராகசியமாகவே வைத்திருந்தார்கள். நீதிமன்றம் எனச்சொன்னால் அங்கே சகலத்தையும் கொட்ட நாங்கள் ஆயத்தமாகி விடுவோம் என்கிற பயம் அதிகாரரிகளுக்கு.

ஜுடிஷியல் கஸ்ரடியில் சிறைக்கு அனுப்பப்பட்ட பின்புகூட அங்கு அதிகாரி ஒருவர் வந்து எங்களை மிரட்டினார். ஜுடிஷியல் கஸ்ரடிக்கு வந்த பின்னர் பொலிசார் எங்களை சித்திரவதை செய்தது பற்றியும் பல தாள்களில் எமது கையொப்பத்தினை அனுமதியின்றிப் பெற்றது பற்றியும். முறையிட்டு மனு அனுப்பினோம். இந்தமனுக்களின் நகல் மற்றும் அதன் மீது நீதிமன்றம் போட்ட உத்தரவு நகல் ஆகியவை அனைத்தையும் நீ.2 ஜீ.நீ.313 செக்ஷன் கீழ் சமர்ப்பித்த வாக்கு மூலத்தின்கீழ் சேர்த்து இணைத்துள்ளோம்.

இந்த வழக்கில் 20.05.1992 அன்று குற்றப் பததிரிகை தாக்கல் செய்தனர். 16.05.92 வரை இந்த வழக்கில் 20 எதிரிகள்தான் சேர்க்கப்ப்டிருந்தனர். அவர்களில் 16 பேர்களிடம் ஒப்புதல் வாக்கு மூலத்தாள்களில் கையொப்பம் பெற்றிருந்தனர். (ஏ-7) கனக சபாபதி, (ஏ-14) பாஸ்கரன், (ஏ-22) சுபா சுந்தரம் (ஏ-26) ரங்கநாத் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்கு மூலக் கையெழுத்து வாங்கப் படவில்லை. கனக சபாபதி, பாஸ்கரன் இருவரும் மிகவும் வயதானவர்கள் சுபாசுந்தரம் வயோதிபப் பருவத்தை நெருங்கிக் கொண்டிருந்தவர். நமது காலநேரத்திற்கு எது வெல்லாம் கைகொடுக்கும் என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். சுபா சுந்தரத்தை அதிகாரிகள் பெரிதாக விசாரிக்கவில்லை. எங்கள் மீது பாய்ச்சப்பட்டது போன்ற கொடுரே சித்திர வதைகளுக்கும் அவரை ஆளாக்கவில்லை. காரணம், அப்போது அவரருடைய உடல் எடை 130 கிலோ. அதனால், அவரைப்பிறர் உதவி இல்லாமல் எழவைக்கவோ, அமர வைக்கவோ முடியாது. அதனாலேயே அவர் கொடூரே சித்திரவதைகளிலிருந்து தப்பினார்.

கனகசபாபதி ஒரு அரச ஊழியர், சுபா சுந்தரம் ஒரு பத்திரிகையாளர் என்பதால், விசாரணை அதிகாரிகள் காட்டிய இடங்களில் கையெழுத்துப்போட அவர்கள் ஒத்துழைக்கவில்லை. கையெழுத்து என்று ஒன்று கிடைத்து விட்டால், அதை வைத்தே எத்தகைய திரைக் கதைகளையும் அதிகாரிகள் அச்சேற்றுவார்கள் என்பதை அந்த இருவரும் அறிந்து வைத்திருந்தார்கள்.

ரங்கநாத் (ஏ-26) அவர்களை பெங்களூர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது தனக்கு நேர்ந்த சித்திரவதைகளை அவர் ஆதாரத்துடன் சொன்னார். அவருடைய பல் உடைக்கப்பட்டதை அவர் ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார். இதனாலேயே ஒப்புதல் வாக்குமூலத்தில் ரங்கநாத்திடம் கெடுபிடி காட்டப்படவில்லை. அவரது மனைவியையே அவருக்கு எதிராக மாற்றி வாக்குமூலம் கொடுக்க வைத்து விட்டமையால், அவர்களுக்கு ரங்கநாத்தின் ஒப்புதல் வாக்குமூலம் தேவையில்லாமல் போய்விட்டது.

மேற்படி 16 எதிரிகளும் 60 நாட்கள்வரை பொலிஸ்காவலில் வைக்கப்பட்டிருந்தோம். ஒவ்வொரு வருடமும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பற்றி அதிகாரிகள் எழுதியிருந்த விபரங்களை பார்த்தோம். மூன்று மணி நேரம் முதல் ஒன்பது மணி நேரம் வரை ஒப்புதல் வாக்குமூலம் வாங்கச் செலவானதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள தகவல்களை நாமாக முன்வந்து சொல்லியிருந்தோம் என்பது உண்மையானால், அதே தகவல்களை பொலிஸாரிடம் சொல்லவும் அதேஅளவு நேரம்தான் செலவாகி இருக்க வேண்டும்.அதிக பட்சம் அதனைப்போல் பத்து மடங்குநேரம் செலவானது எனக்கொண்டால்கூட மொத்தம் ஆறு நாட்கள்தானே அகும். ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்க 60 நாட்களாக பொலிஸார் எங்களை படுத்தி எடுத்தது ஏன்? அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதால்தானே... பொய்யான கற்பனைகளில் நாங்கள் கையெழுத்திடமாட்டோம் என்பது தெரிந்துதானே. இத்தனை சித்திரவதைகள்? இந்த 60 நாட்களில் எங்களின் உடலும் மனமும் எத்தனை விதமான குரூரங்களுக்கு ஆளாகியிருக்கும்? மரணத்தையும் ஒப்புக் கொள்ளும் மன நிலையை உருவாக்கத் தான் அதிகாரிகளுக்கு இந்த 60 நாட்கள் அவகாசம்.

16.05.92இல் இந்த வழக்கில் சேர்க்கப்பட்ட 6 எதிரிகளும் விடுதலை செய்யப் பட்டனர். அதிலும் நால்வர் எந்தவகை யிலும் ரஜீவ்காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல எனச் சொல்லி விடுவிக்கப்பட்டனர். நியாயமாக நாங்கள் சொல்லிய உண்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டிருந்தால், இவர்களைப்போல் வெளியே வந்திருக்கவேண்டியவர்கள் தான் நாங்களும்... ஆனால், சித்திரிப்புக்களுக்கும் சித்திர வதைகளுக்கும் எங்களைப் பலி கொடுக்க அதிகாரிகள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற்றுவிட்டன. ஒப்புதல் வாக்கு மூலம் என்கிற பெயரில் அதிகாரிகள் எங்களின் தலையெழுத்தை தண்டனைகளாலேயே நிரப்பினர்.

மரணம், பனை மர நிழலைப்போல், எங்களைச் சுற்றி அங்குமிங்குமாக நகர்ந்து வருகிறது. அதன் துரத்தலுக்குப் பயந்து நாங்களும் அங்குமிங்குமாக ஓடுகிறோம். இன்னும் முழுவதுமாக மரண பயம் எங்களை விட்டு நீங்கவில்லை. குற்றவாளிகளாக நாங்கள் கொதத்தாக வளைக்கப்பட்ட நேரம் நெஞ்சத்திற்குள் அப்படியே நீள்கிறது. ரஜீவ் காந்தி இந்தியாவின் பலம் பொருந்திய தலைவர். அவர் கொலை செய்யப்பட்ட செய்தி பரவியபோது, மொத்த இந்தியாவும் ஸ்தம்பித்துப்போனது. தமிழ் நாடு முழுக்கக் கொந்தளிப்பு... பல இடங்களில் நாசகார வேலைகள் நிகழ்ந்தன. வீதிகள் முழுக்க வெட்டுக்குத்து... தீயிற்குப் பயந்து பேருந்துகள் பதுங்கிக்கொண்டன. "அவ்வளவு பெரிய தலைவரக்கொன்னுட்டாங்களே..." என்கிற ஆதங்கமும் பரிதவிப்பும் எல்லோருடைய மனங்களிலும் எதிரொலித்த நேரம்.

அப்போது தான் நாங்கள் ரஜீவ் கொலையின் காரண கர்த்தாக்களாக வளைக்கப்பட்டோம்.நாடே கோபாவேசமாக இரு கிற நிலையில் எங்களை நோக்கிய பார்வை மக்களுக்கு எப்படி இருந்திருக்கும்? "தலைவரைக் கொன்ன பாவிகள் இவங்க தானா?" எனப் பத்திரிகைகளில் வெளியான எங்களது படங்களைப் பார்த்த மக்கள் எப்படியெல்லாம் கர்ஜித்திருப் பார்கள்..? அந்த நேரத்தில்நாங்கள் எந்தவித நியாயத்தைச் சொன்னாலும் அதுமக்களால் ஏற்கப்பட்டிருக்காது. எங்களுக்காக ஆஜராக வழக்கறிஞர்கள் முன் வரவில்லை. ரஜீவ் கொலை யின் நிஜப் பின்னணி என்ன என்பதை அறிந்து கொள்ளக்கூட வழக்கறிஞர்கள் ஆர்வம் காட்டவில்லை. அப்படியுயே அவர்கள் எங்களுக்காக ஆஜராகியிருந்தாலும் மக்கள் மன்றத்தில் அவர்களையும் அவமானப் பேய் சூழ்ந்திருக்கும்.



மிகப்பெரிய தலைவர் கொல்ப்பட்ட பரபரப்பும் பதற்றமும் நிலவிய நிலையில் கண்ணியில் சிக்கிய காடைக் குருவிகளாய் நாங்கள் அதிகாரிகளின் பிடியில் இருந்துதோம். கதறினால்கூட தவறு என்கிற நிலையில் எங்களால் என்ன செய்திருக்க முடியும். எங்களை விசாரித்த அதிகாரிகள் இந்நேரம் பணி ஓய்வில், வீட்டிற்குப் போயிருப்பார்கள். ஆனால், எங்களின் வாழ்க்கையில் அதிகாரம் அள்ளிப்போட்ட மண், மரண மேடாக எங்களை விழுங்கத் துடிக்கிறது. மரணம் வெல்கிறதோ, வீழ்கிறதோ... ஆனால், அதற்குள் எங்கள் நெஞ்சுக்கூட்டுக்குள் இருக்கும் அத்தனை உண்மைகளையும் உரக்கச் சொல்லிவிட வேண்டும் என துடிக்கிறது மனது!

ஜூனியர் விகடன்

# எந்தவொரு இந்திய மீனவரும் எமது கடற்பரப்புக்குள் நுழைய முடியாது

## பாதுகாப்பு அமைச்சினூடாக நடவடிக்கை என்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

**அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருப்பதால் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதை தடுக்க முடியாதிருப்பதாக தெரிவித்த மீன்பிடி மற்றும் நீரக வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன பாதுகாப்பு அமைச்சின் செயலாளரூடாக இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக குறிப்பிட்டார்.**

அந்தமான் தீவில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் ஐவரையும் இந்திய மத்திய அரசின் துணையோடு மீட்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த மீனவர்களின் விடுதலைக்காக இங்கு போலியான உண்ணாவிரதப் போராட்டங்கள் இடம்பெற்று வருவதாகவும் கூறினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், அந்தமான் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாக எமது நாட்டைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் அங்கு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் ஒரு படகும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த படகினையும் மீனவர்களையும் மீட்டுத் தருவதாக போலியான வாக்குறுதிகளை அளித்து தேரர் ஒருவர் தலைமையிலான குழு வொன்று பணம் பறித்து கற்பிட்டி போன்ற பிரதேசங்களில் உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இந்த போலியான குழுவிடம் பலர் பெருந்தொகை பணத்தை இழந்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது மீனவர்கள் ஐவரையும் படகையும் மீட்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அந்தமான் தீவுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையிலான தொடர்பாடல் பரிமாற்றங்கள் தாமதமடைந்து வருவதாலேயே மேற்படி மீனவர்களை மீட்கும் நடவடிக்கையில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்திய மத்திய அரசின் துணையுடன் இந்த மீனவர்களை மிக விரைவில் மீட்டு வருவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் அண்மைக்காலமாக இந்திய மீனவர்கள் எமது நாட்டு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் நடவடிக்கை அதிகமாக இடம்பெற்று வருகிறது. அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டிருப்பதால் இது தொடர்பில் அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

எனவே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரூடாக நடவடிக்கைகள் மேற்கொண்டு கடற்படையினரை ஈடுபடுத்தி மேற்படி மீனவர்கள் நுழைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில் எந்தவொரு இந்திய மீனவரும் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதை அனுமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளேன்.

யுத்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில ஒப்பந்தங்களின் காரணமாக இந்திய மீனவர்கள் இங்கு அத்துமீறி செயற்படுவது தடுக்க முடியாதிருக்கின்றது. எனினும் இது மாற்றியமைக்கப்படும்.

(4-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மடத்துவளவு கிராமத்தில் கடந்த 20 வருடங்களின் பின் மீள்குடியேறிய மக்களுக்கான பொதுக்கூட்ட மொன்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் மக்களின் நலன் கருதி நெய்தல் கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் தலைவராக தே.தயாளன், செயலாளராக மு.வைத்திலிங்கம், பொருளாளராக ச. செபஸ்தியான் ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன் ஒன்பது உறுப்பினர்கள் இதன்போது தெரிவு செய்யப்பட்டதாக இச்சங்கத்தின் கணக்காளர் க. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

(4-2)

## மகசீன் சிறையிலுள்ள தமிழ்கைதிகளுக்கு பொருட்கள் வழங்க தடை

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு வெளியிலிருந்து பொருட்கள் கொண்டுவரப்படுவதனை சிறைச்சாலை நிர்வாகம் தடுத்துள்ளதுடன் சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையிலேயே பொருட்களை வாங்கவேண்டுமென பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இங்கு தடுத்தவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள் பாதிப்பினை எதிர் நோக்கியுள்ளனர். கைதிகளை பார்வையிட தூர இடங்களில் வரும் உறவினர்கள், நண்பர்கள், உணவுப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை கொண்டுவந்து வழங்குவது வழமையாக இருந்து வந்துள்ளது.

தற்போது சீனி, மா உட்பட எத்தகைய பொருட்களையும் கைதிகளைப் பார்வையிட வருவோர் கொண்டுவரக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையில் பணம் கொடுத்து பொருட்களை வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெருமளவான கைதிகள் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

வழமைபோன்று வெளியிலிருந்து பொருட்களைக் கொண்டுவருவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## றோசா/பன்னீர்ப்பூ

Botanical Name:-Rosadamascena
Family-Rosaceae
Engl- Rose flower

சிறுசெடி அல்லது பெருஞ்செடி வகைகளாகும். தனியிலை நிறைந்த மாற்றிலை அடுக்கும் கொண்டவை. முட்கள் நிறைந்த குத்துச்செடியாகும். தனிமலர் அல்லது சமமட்டமஞ்சரி(corymb) இருபாலான மலர்கள். ஆரச்சமச்சீர் மலர் பெரும்பாலும் இடைமட்ட சூலகம் (Perignous) உடைய மலர்கள். பூக்கள் கோப்பை வடிவம், புல்லி இதழ்கள் ஐந்து இணையவில்லை. அல்லி இதழ்கள் ஐந்தும் பூத்தளத்தின் விளிம்பில் பொருந்திக்காணப் படும்.

பல மகரந்தங்கள் இணையவில்லை. மகரந்தப்பை இரு அறை. பூக்களின் நிற வேற்றுமையில் வெள்ளை, இளஞ்சிவப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வகைகள் உண்டு. ரோசா காடுகளிலும் வளருகிறது. காட்டு ரோசாசெடி நறுமணம் உடையதன்று.

**பரம்பலம் இனவிருத்தியும்:**

தண்டுத் துண்டங்கள் மூலமும் ஒட்டு முறை மூலமும் இனவிருத்தி செய்யலாம். பொதுவான பரம்பல் காணப்பட்ட போதிலும் இந்தியாவில் நறுமண எண்ணெய்க்காக ஆயிரம் அடி உயர பகுதிகளில் மலர்களுக்காக பயிரிடப்படுகின்றது.

**மருத்துவப்பண்புகள்:**

இளம் சிவப்பு நிறப்பூக்களின் இதழ்களில் நல்ல வாசனையுடன் மருத்துவ குணமுடைய அவசியமான தைலம் சத்துக்கள் உள்ளன. சிவப்பு நிறம் தரும் பொருட்களுடன் அமிலங்களும் உள்ளன. குளுக்கோசைட்டு க்விர்திகிட்ரின் (ouercitin) முதலிய சத்துக்களும் இருக்கின்றன.

மேலும் காலிக்கமிலம், வாசனை தரும் தைலம் உள்ளன. பூவிதழ்கள் இலேசான துவர்ப்புச்சத்துள்ளது. புண்களை இது ஆற்றும். உடல் முழுவதும் பலம் தந்து இருதயம்



நரம்பிற்கு வன்மை தரும்

தொண்டைநோய்கள், சளி, இருமல், நாவரட்சி குணமாகும். இதில் உள்ள துவர்ப்புச் சத்து வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்தும்.

பெண்களின் மாதவிடாய், கர்ப்பப்பை சம்பந்தமான நோய்களை குணமாகும். மலபந்தம், ஆசனஎரிவு நீங்கும்.

★ ரோசா பன்னீர் :

ரோசா பூவிதழ்கள் -1500 கிராம்

சுத்தமான நீர் - 4250 மி.லீ ஆகியவற்றை எடுத்து 24 மணிநேரம் நீரில் பூவிதழ்களை ஊறவிட்டு வாலை இயந்திரத்தில் இட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இதை கண்ணிற்கு சொட்டு மருந்தாக பாவிக்கலாம்.

★ 5 தேக்கரண்டி அளவு பன்னீர் காலை, மாலை சாப்பிட்டால் உடல் உஷ்ணம் தணியும். மயக்கம், கிறுகிறுப்பு, இருதயப்படபடப்பு நீங்கும். மூளையும் மனமும் சுறுசுறுப்பாக இயங்கும். பன்னீர் மிகுந்த நல்ல மணமுடையது. களிம்பு தயாரிப்பில் சேர்க்கும் பொருளாக பன்னீர் பயன்படுத்தப்படுகிறது.

★ உதட்டு வறட்சி, வெடிப்பு நீங்கி உதடு மென்மையாகவும் சிவப்பாகவும் வருவதற்கு

ஒலிவ் எண்ணெய்-2தேக்கரண்டி
சாதிக்காய்-2 எண்ணிக்கை
தேன்மெழுகு-2 கிராம்
பன்னீர்-2 தேக்கரண்டி.

இவற்றில் தேன் மெழுகை உருக்கி ஒலிவ் எண்ணெய் மற்றும் பன்னீருடன் கலந்து கொள்ளவும். சாதிக்காயை தோல் நீக்கி பொடித்து, அரித்து கலந்து கொள் ளவும். கிறீம்போல் ஆகும்வரை தயாரித்து வைத்துக்கொள்ளவும். உதட்டில் பூசிவர மேற் படி பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

★ உலர்ந்த ரோசா பூவிதழ்களும் கடுக்காய் தோலும் சம அளவு எடுத்து பொடித்து, அரித்து கலந்தரிந்து வைத்துக்கொள்ளவும். 2 தொடக்கம் 4 கிராம் அளவு இரவு வெந்நீரில் எடுக்க மலக்கட்டு நீங்கி மலச்சிக்கல் நீங்கும்.

பச்சைப்பயறு-500 கிராம்
வெந்தயம்-100 கிராம்
மஞ்சள்-50கிராம்
உலர்ந்த எலுமிச்சம் தோல்-50 கிராம்
உலர்ந்த ரோசா இதழ்-75 கிராம்

இவைகளை நன்றாக உலர்த்தி, பொடித்து, குளியல் பொடியாக உடம்பில் பூசிக்குளித்தால் சொறி, சிரங்கு, தோல் வறட்சி ஏற்படாது. தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும். இதே குளியல்பொடியை முகத்திற்கு பூசி ஊறவிட்டு கழுவிவர முகம்பிரகாசமாகவும் சருமம் மிருதுவாகவும் அமையும்.

★ ஒரு பங்கு ரோசாவை அரைத்து அதன் எடைக்கு 3 பங்கு தூயதேன் கலந்து சாடியில் போட்டு தினசரி வெயிலில் சூரிய ஒளி படும்படி சில வாரங்கள் வைத்து எடுக்கவும். ஒரு தேக்கரண்டி காலை, மாலை சாப்பிட பித்தரோகங்கள், வெள்ளை சாய்தல், உடல் உஷ்ணம் நீங்கி உடல் பலம்பெறுவதுடன் மலக் கட்டும் நீங்கும்.

★ ரோசா பூவிதழ்கள் 500 கிராம் எடுத்து 2லீற்றர் நீரிலிட்டுக் காய்ச்சி 400 மில்லி ஆக குடிநீர் ஆனதும் கசக்கி வடிகட்டி பிழியவும். 500 கிராம் சீனி அல்லது தேன் கலந்து காய்ச்சி பாகுபதத்தில் இறக்கவும். 10-60 மில்லி வரை நீர் கலந்து அருந்தவும். உடல் ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கு முகந்த மென் பானமாகும். இருதயத்தையும் பலப்படுத்தும்.

★ 35 கிராம் ரோசா 400 மில்லி நீர் விட்டு 1/4 ஆக வற்றக்காய்ச்சி குடிநீரில் 30 மில்லி அளவு எடுத்து 100 மில்லி பாலில் கலந்து குடிக்க மலம் இலகுவில் கழிந்து உடல் உஷ்ணத்தையும் தணிக்கும்.

★ ரோசா பூவிதழ்கள் பச்சையாக 175 கிராம், சடாமாஞ்சில்35 கிராம் இவை எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து அரைத்து பன்னீர் கலந்து பெரிய வில்லையாக செய்து உலர்த்திக் கொள்ளவும். குளிக்கும் போது வில்லைகளை உடலில் தேய்த்து குளிக்கலாம். இதனால் தோல் வியாதிகள் ஏற்படாமல் சருமத்தை பாதுகாப்பாக பேணமுடியும்.

ரோசாப்பூ எண்ணெய்:

றொசா இதழ்கள் 70 கிராம் அளவு எடுத்து(fresh) 500 மில்லி நல்லெண்ணெயில் கலந்து தினமும் வெயிலில் வைத்து எடுக்கவும். இவ்வாறு 15 நாட்கள் தினமும் வெயிலில் வைத்து எடுத்து வடித்து சேகரித்து வைத்துக்கொள்ளவும். உடல் வலிக்கு மசாஜ் எண்ணெயாக போட்டு தேய்க்கலாம்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# அரசியல் தீர்வு விடயத்தில் புலிகளின் அக்கறை கூட்டமைப்புக்கு இல்லை

## வீட்டு நெருப்பை வெளியே கொண்டுவரக்கூடாது என்கிறார் பசில்



(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் அமைப்பு சமாதான ஏற்பாடு மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் காட்டிய துளியளவிலான அக்கறையைக்கூட தற்போதைய நிலைமையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிக்காட்டுவதாக தெரியவில்லை. அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித அர்ப்பணிப்பும் காட்டாமல் இருந்து வருகின்றது. அது தீர்வு விடயத்தில் இதுவரை வெளிக்காட்டிய ஒரு அர்ப்பணிப்பையாவது குறிப்பிட முடியுமா? என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.**

வீட்டுக்குள் இருக்கும் நெருப்பை வெளியில் கொண்டு செல்லக்கூடாது. வெளியில் இருக்கும் நெருப்பை வீட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என கூறப்படுவதுண்டு. விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல தடவைகள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பங்களை வழங்கினார். ஆனால், அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று ஜனாதிபதியின் அழைப்பை புலிகள் ஏற்றிருந்தால் இன்று நிலைமை வேறு விதத்தில் இருந்திருக்கும்.

எனினும் புலிகள் அமைப்பானது இறுதித் தருணத்தில் ஏதாவதொரு சக்தி தலையிட்டு தங்களை காப்பாற்றும் என நம்பியது.

ஆனால், இறுதியில் என்ன நடந்தது? இந்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றது. அதாவது தாங்களும் ஏமாற்றமடைந்து தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் தலையிடக்கூடிய முழுமையான உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், இந்தப் பிரச்சினையில் தலையிடுவதற்கு உரிமையைக் கொண்டுள்ள இந்தியாகூட பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு வரவேண்டும் என கூறுகின்றது. அதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டும்.

வடக்கு மக்களின் கருத்தைக் கேட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்பட வேண்டும். மாறாக புலம்பெயர் தமிழ் மக்கள் கூறுவ தைக் கேட்டுக் கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும். கனடாவில் பேசிக் கொண்டிருக்கும் தமிழ் எம்.பி. இலங்கையில் பிறக்காதவர். அதாவது அடுத்த தலைமுறையை சேர்ந்தவர். அவர் இலங்கையை விமர்சித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்.

அதாவது இந்த மண்ணில் பிறந்து சிரமங்களை எதிர்கொண்ட மக்கள் என்ன கூறுகின்றார்களோ அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தமக்கு வாக்களித்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்முடன் கலந்துரையாட வேண்டும். அரசாங்கத்துடன் கலந்துரையாடி பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

அண்மையில் சர்வதேச அரங்கு ஒன்றில் எமது நாட்டின் அமைச்சர் ஒருவர் இலங்கையின் நிலைமையை தெளிவுபடுத்தி உரையாற்றியிருந்தார். உடனே அதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் எதிர்த்து அறிக்கை விடுத்தார். இவ்வாறான செயற்பாடுகளில் புலிகள் கூட ஈடுபடவில்லை. எந்தவொரு அரசியல் கட்சியும் அவ்வாறு செய்ததில்லை. ஆனால், கூட்டமைப்பு அதனை செய்தது.

தாருஷ்மான் அறிக்கை வெளி வந்ததும் அதனை ஆதரித்து அறிக்கை வெளியிட்டனர். தற்போது இடம்பெற்றிருக்கும் அமெரிக்க விஜயம் இந்த வகையில் அமைந்துவிடக்கூடாது என்று நாங்கள் கருதுகின்றோம். அதாவது தீர்வு விடயத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அன்று எடுக்கப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தினால் 30 வருடங்களை நாங்கள் இழந்தோம். அதாவது இரண்டு தலைமுறைகளை இழந்துவிட்டோம். எனவே, எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். தமிழ்த்தேசிய கூட்மைப்பின் சம்பந்தன் எம்.பி. சிரேஷ்ட அரசியல்வாதி, அனுபவமிக்க தலைவர். எனவே, அனைவரது அனுபவங்களும் அறிவும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு எங்களுக்கு தேவைப்படுகின்றது.

எனவே, கூட்டமைப்பினர் இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்பட்டு தமக்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அதனை மேலும் பலப்படுத்த வேண்டும் என பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(4-2)

## ஐந்து பாடப் பிரிவுகளின் கீழ் உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள்

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஐந்து பாடப் பிரிவுகளின் கீழ் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய நான்கு பாடப்பிரிவுகளின் அடிப்படையில் இதுவரையில் உயர்தர மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், புதிய பாட விதானத்தின் அடிப்படையில் மற்றுமொரு புதிய பாடப்பிரிவு அறிவிக்கப்பட்டது.

இதன்படி பொதுப் பாடப்பிரிவு என்னும் மற்றுமொரு பாடப்பிரிவு மொத்தமாக ஐந்து பாடப் பிரிவுகளின் அடிப்படையில் இம்முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட புதிய பாட விதானம் தொடர்பான சுற்று நிரூபத்தின் அடிப்படையில் இந்தப் பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சையில் புதிய பாட விதானத்தின் கீழ் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதன்படி இம்முறை உயர்தரப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி ஐந்து பாடப்பிரிவுகளின் கீழ் வெளியிடப்படவுள்ளது. (4-2)

## முறைப்பாடுகளை முன்வைக்க புதிய தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

மிருகக்காட்சிசாலையில் விலங்குகளை பார்வையிடச் செல்பவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்த முறைப்பாடுகளை முன்வைக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் புதிய தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

011 2 712 812 என்ற இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என திணைக்களத்தின் பணிப்பாளர் ஹாஷ்வர சேனாங்க குணரத்ன குறிப்பிட்டார்.

அதன் பிரகாரம் தெஹிவளை மிருகக் காட்சிசாலை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் ஆகியன தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்க முடியும் என பணிப்பாளர் கூறினார். இந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக எந்தவொரு பார்வையாளருக்கும் தமது முறைப்பாடுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் கூறினார்.

அத்துடன் விலங்குகளுக்கும் பின்னவல யானைகள் சரணாலயத்திலுள்ள யானைகளுக்கும் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என தேசிய மிருகக் காட்சிச் சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஹாஷ்வர சேனாங்க குணரத்ன மேலும் குறிப்பிட்டார். (4-2)

## சிசுவின் உடல் மீட்பு

அக்குறணை நகருக்கு அருகாமையில் ஓடும் ஆற்றிலிருந்து சிசுவொன்றின் சடலம் கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

ஆற்றின் நடுவில் காணப்பட்ட இக்குழந்தை நேற்றுமுன்தினமிரவு அல்லது நேற்று அதிகாலை பிறந்திருக்கலாம் என்று பொலிஸாரால் நம்பப்படுகிறது.

மேற்படி சிசுவின் தாய் யார் என்பதை கண்டறிவதற்காக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிசுவின் சடலம் தொடர்பான மரண விசாரணையை கண்டி நீதிவான் முன் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-2)

## பாதாள உலக குழுவை கட்டுப்படுத்த முறையான திட்டம் அவசியமானது

### பொலிஸ் மா அதிபர் வலியுறுத்து

(கொழும்பு)

பாதாள உலக கோஷ்டியினரை கட்டுப்படுத்தும் முறையான திட்டமொன்றின் அவசியத்தை முன்னாள் பொலிஸ் மா அதிபர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு செயற்பாடு வலையமொன்று அவசியம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதாள உலக கோஷ்டியினரை சுற்றிவளைப்பதற்காக செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு முறையாக சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன குறிப்பிடுகின்றார்.

அனைத்து நடவடிக்கைகளையும் பலத்த கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதாள கோஷ்டியினர் தொடர்பான தகவல்கள் சேகரிப்பதுடன் அதனூடாக ஆய்வுகளை மேற்கொண்டு பாதாள கோஷ்டியினர் நடமாடும் இடங்கள் அவர்களுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் இனங்காண வேண்டும் என ஜயந்த விக்ரமரத்ன தெரிவிக்கின்றார்.

இந்த நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் பொலிஸ் மா அதிபர்களின் கீழ் குறித்த பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என அவர் கூறினார்.

அத்துடன் குறித்த குழுவினரால் விடயங்கள் தெளிவுபடுத்தப்படும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எனவும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதாள உலகக் கோஷ்டியினரை கைது செய்வதுடன் அதற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களையும் சட்டத்தின் முன்னாள் கொண்டு வர வேண்டும் என முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்ரா பெர்னாண்டோ சுட்டிக்காட்டுகின்றார்.

போதைப் பொருள், சொத்துக்களை அபகரித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் மேலும் விரிவான விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என அவர் கூறுகின்றார்.

பாதாள உலகக் கோஷ்டியினரை கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவிக்கையில், பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய அந்த நடவடிக்கைகளுக்காக செயற்பட்டு திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸார் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பாதாள உலக கோஷ்டியினரை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாதாள கோஷ்டியினர் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினரை ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் இது தொடர்பில் பாரிய திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

## எந்த விடயத்தை அடிப்படையாக வைத்து கனிமொழியின் பிணைமனுவை எதிர்க்கவில்லை?

## சி.பி.ஐ. யிடம் கேட்டது உச்ச நீதிமன்றம்

(புதுடில்லி)

தி.மு.க. எம்.பி. கனிமொழி உள்ளிட்ட 5 பேரின் பிணை மனுவை எதிர்க்கப் போவதில்லை என எந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்து முடிவு எடுத்தீர்கள் என சி.பி.ஐ. யிடம் உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தொழில் அதிபர்கள், சஞ்சய்சந்திரா, வினோத் கோயங்கா, கரிம் மொரானி உள்ளிட்டோருக்கு பிணை அளிக்க டில்லி சிறப்பு நீதிமன்றம் சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவித்திருந்தது. ஆனாலும் தி.மு.க. எம்.பி. கனிமொழி, கலைஞர் ரி.வி நிர்வாகி சரத்குமார் மற்றும் ஆசிப்பல்வா, ராஜீவ் அகர்வால், கரிம் மொரானி உள்ளிட்டோரது பிணைமனுவை எதிர்க்கப்போவது இல்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தது. இதனை அடுத்து சஞ்சய்சந்திரா உள்ளிட்ட 5 பேரும் பிணை அளிக்கக்கோரி உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். அந்த மனுவில் பிணை அளிக்கும் விவகாரத்தில், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் சி.பி.ஐ. சமமாக பார்க்கவேண்டும். ஆனால் எங்கள் 5பேருக்கும் பிணை அளிக்க எதிர்ப்பு தெரிவித்துள்ளது என கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி ,எச். எல்.டாட்டு ஆகியோரை கொண்ட பெஞ்ச் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் எந்தக்காரணத்தை அடிப்படையாக வைத்து கனிமொழி உள்ளிட்டோரது பிணைமனுவை எதிர்க்கப் போவதில்லை என முடிவு செய்தீர்கள் என்பது குறித்து நீதிமன்றில் பதில் அளிக்க வேண்டும் என சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டனர்.

டில்லி உயர் நீதிமன்றில் ரிலைஜன்ஸ் தொலைத்தொடர்பு நிறுவனம் சார்பில் ஒரு மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் ஸ்வான் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் எங்களுக்கு 9.9 சதவீதத்துக்கும் குறைவான பங்குகளே இருந்தன. அந்த குறைவான பங்குகளும் ஸ்பெக்ட்ரம் உரிமம் வழங்குவதற்கு முன்பே விற்கப்பட்டு விட்டன. எனவே, ஸ்வான் நிறுவனம், எங்களின் துணை நிறுவனம் என்ற சி.பி.ஐ இன் குற்றச் சாட்டு தவறானது. எனவே, ஸ்பெக்ட்ரம் வழக்கில் எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி முக்தா குப்தா முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது இது குறித்து பதிலளிக்கும்படி சி.பி.ஐக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார். ஆனாலும் தொலைத்தொடர்புத்துறை, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்,சட்ட அமைச்சகம் ஆகியவற்றுக்கும் நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என்று ரிலையன்ஸ் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் கோரிக்கையை நீதிபதி நிராகரித்து விட்டார். (4-2)

## பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப்பணத்தை கண்டறிய வருமான வரித்துறை நடவடிக்கை

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கணக்கில் வராத கறுப்பு பண விவகாரம் தொடர்பாக வருமான வரித்துறை அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக முக்கிய தொழிலதிபர்கள் எம்.பிக்களிடம் விசாரணை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இந்தியர்கள் பதுக்கியுள்ள கறுப்புப் பணத்தை கொண்டுவர வலியுறுத்தி நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக மத்திய அரசு வருமான வரித்துறை அதிகாரிகள் குழுவை அமைத்துள்ள இக்குழுவினர் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று இந்தியர்கள் கறுப்பு பணத்தை பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த இரு மாதங்களில் 35 இற்கும் மேற்பட்ட வருமான வரித்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் உள்ள எச்.எஸ். பி.சி வங்கி கணக்கில் வராத இந்தியர்களின் கறுப்புப் பணம் ரூபா 800 கோடி உள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் 700 இந்தியர்களின் வங்கி கணக்குகள் பிரான்ஸ் நாட்டு வங்கிகளில் உள்ளது எனவும் ஜெர்மனிய நாட்டில் உள்ள வங்கியில் 18 இந்தியர்களின் கறுப்புப் பணம் ரூபா 18 கோடி உள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக டில்லியை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் வருமானவரித்துறைக்கான குற்றவிசாரணை இயக்குநர் தலைமையிலான உயரதிகாரிகள், மும்பையைச் சேர்ந்த சில தொழிலதிபர்கள், முக்கிய புள்ளிகள், உத்தரபிரதேசம், கேரளா ,அரியான மாநிலங்களைச் சேர்ந்த மூன்று எம்.பி.களுக்கு வஷீமானவரித்துறை நோட்டீஸ் அனுப்பி விசாரணை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (4-2)

## மன்மோகன் சிங் பிரான்ஸ் பயணம்

(புதுடில்லி)



ஜி-20 உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரான்சிற்கு மன்மோகன்சிங் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

பிரான்சின் கேன்ஸ் நகரில் நாளை ஆரம்பமாகவுள்ள ஜி-20 உச்சிமாநாடு ஆரம்பிக்க உள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மன்மோகன் சிங் பிரான்ஸ் செல்லவுள்ளார். அவருடன் மத்திய திட்டக்குழு துணை தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் பிரான்ஸ் செல்கின்றது.

பிரதமர் ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்ளும் தகவலை வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விஷ்ணுபிரசாத் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார். (4-2)

## பாரதச் செய்திகள்

## சோனியா, ராகுலுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு

(புதுடில்லி)

சுவிஸ் வங்கியில் கறுப்பு பணம் உள்ளதாக கூறி காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா மற்றும் ராகுலுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் மனோகர்லால் சர்மா வழக்குப் பதிவு செய்துள்ளார்.

அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப் பட்டுள்ளதாவது, சுவிஸ் நாட்டில் ஒரு வங்கிக்கணக்கில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வங்கிக் கணக்கு சோனியா மற்றும் ராகுல் காந்திக்கு சொந்தமானது என்ற சந்தேகம் உள்ளது. இந்த கணக்கு மீது இவர்கள் இருவரும் இதுவரை உரிமை கோரவில்லை என்றபோதிலும் இந்த சொத்துக்கள் இவர்களுக்கு சொந்தமானதாக இருக்கவேண்டும். கடந்த தேர்தலின் போது தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்த ஊறுதிமொழி பத்திரத்தில் இந்த விபரத்தை இருவரும் மறைத்து விட்டனர். எனவே, சுவிஸ் வங்கியில் உள்ள சம்பந்தப்பட்ட கணக்கு விபரங்களை பெற மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

அதேபோல சோனியா, ராகுல்காந்தி ஆகியோர் தங்களது நிலையை விளக்கவும் அந்தக்கணக்கிலுள்ள பணத்தை இந்திய வங்கிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

## எல்லையை பாதுகாக்கும் சக்தி இந்திய இராணுவத்துக்குள்ளது

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

எல்லையை பாதுகாப்பதிலும் வெளிநாட்டு சக்திகளின் சதியை முறியடிக்கும் திறன் இந்திய இராணுவத்துக்கு உள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான அமைப்பு சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் சீனா, இந்தியாவிற்கு எதிராக சிறிய அளவில் தாக்குதல் நடத்தும். இந்த தாக்குதல் கார்கில் போர் போன்று இருக்கும். தனக்கு எதிராக வளர்ந்து வரும் இந்தியாவின் செல்வாக்கை கட்டுப்படுத்தவும் இந்தியாவுக்கு பாடம் புகட்டவேண்டும் என்ற எண்ணத்திலும் சீனா இந்த போரை நடத்தும் என கூறியிருந்தது.

இந் நிலையில் டில்லியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்திடம் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இது குறித்து அவர் கூறியதாவது, இது போன்ற வெளிநாட்டு தாக்குதல் குறித்த பாதுகாப்பு தொடர்பான கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடியாது. இருந்தபோதிலும் இந்திய எல்லையை பாதுகாக்கும் திறமை இந்திய இராணுவத்தினருக்கு உள்ளது. வெளிநாட்டு சக்திகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவி சதிச் செயல்களை முறியடிக்கும் சக்தி இந்திய இராணுவத்திற்கு உள்ளது என கூறினார்.

மேலும் அவர் இந்தியாவிற்கு எதிராக போராடும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முழு ஒத்துழைப்பு வழங்குவதாக வங்கதேசம் உறுதியளித்துள்ளது. அந்நாட்டில் பயங்கரவாத குழுக்கள் இயங்கினால் அவர்களுக்கு எதிராக வங்கதேசம் நடவடிக்கை எடுக்கும். வங்கதேசத்தில் இந்தியாவிற்கு எதிராக இயங்குபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி அந்நாட்டுடன் இந்தியா பேசி வருவதாகவும் கூறினார். (4-2)

## இளையராஜாவின் மனைவி ஜீவா மாரடைப்பால் மரணம்

## சோகத்தில் இசைக் குடும்பம்


(சென்னை)



தமிழ் திரைப்பட உலகில் கடந்த 30 ஆண்டுகளாக 950 இற்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்தவர் இளையராஜா. தி.நகரில் குடும்பத்துடன் வசித்துவரும்இவருக்கு, மனைவி ஜீவா(வயது-58)உடன் கார்த்திக்ராஜா, யுவன் சங்கர்ராஜா என்ற இரு மகன்களும் பவதாரணி என்ற மகளும் உள்ளனர்.

அவரது மனைவி ஜீவாவுக்கு நேற்று முன்தினமிரவு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டது. அருகில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரை பரிசோதனை செய்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக கூறினர்.

இசையமைப்பதற்காக ஐதராபாத் சென்றுள்ள இளையராஜாவுக்கு இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. மறைந்த ஜீவா கடைசியாக சென்னையில் நடந்த சத்தியஜோதி தியாகராஜன் மணி விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. (4-2)



பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி இரத யாத்திரைப் பாதையில் பைப் குண்டு வைக்கப்பட்டிருந்தது பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுத்த மதுரை திருமங்கலத்தை சேர்ந்த அ.தி.மு.க பிரமுகர்கள் செல்வராஜ் மற்றும் செல்வம் ஆகியோரை சென்னைக்கு வரவழைத்து தலா ரூபா 50 ஆயிரத்தை முதல்வர் ஜெயலலிதா பரிசாக வழங்கியதை படத்தில் காணலாம்.

## லிபியாவிற்கு இடைக்கால அரசு பிரதமர் நியமிப்பு

(டிரிபோலி)

லிபிய இடைக்கால அரசின் பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கு ஆபிரிக்க நாடான லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து என்.டி.சி.எனப்படும் தேசிய இடைக்கால குழு லிபியாவை தற்காலிகமாக ஆட்சி செய்து வருகிறது.


இந்நிலையில் இடைக்கால அரசின் பிரதமராக அப்துல்-அல்-ரஹீம் அல்-குயீப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இடைக்கால குழுவின் உறுப்பினர் ஆவார். முன்னாள் ஜனாதிபதி கடாபி கடந்த 20 ஆம் திகதி கொல்லப்பட்ட பின் லிபியா சுதந்திர நாடாக பிரகடனப் படுத்தப்பட்டது.

அப்போது இடைக்கால பிரதமராக இருந்து வந்த முகமது ஜப்ரில் பதவி விலகினார். புதிய பிரதமராக அப்துல் அல் ரஹீம் அல் குயீப் பொறுப்பேற்றார்.

இன்னும் 8 மாதங்களுக்குள் லிபியாவில் புதிய அரசியலமைப்பு சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அதற்கு முன்பாகவே தேசிய அசம்பிளியான பாராளுமன்ற தேர்தலும் நடத்தப்படும் எனவும் தேசிய இடைக்கால குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (4-2)

# யுனெஸ்கோவில் முழுநேர உறுப்பினராக பாலஸ்தீனம் தேர்வு

## அமெரிக்கா கடும் கண்டனம்



யுனெஸ்கோவில் பாலஸ்தீனம் முழுநேர உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இத்துடன் அமெரிக்கா வழங்கும் பல ஆயிரம் கோடி டொலர்களை நிறுத்தவும் முடிவு செய்துள்ளது.

ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் கலாசாரக் கிளை அமைப்பான யுனெஸ்கோவில் உலகம் முழுவதும் 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் உறுப்பினராக உள்ளன.

இதில் பாலஸ்தீனம் உறுப்பினராக கடும் முயற்சியை மேற்கொண்டு வந்தது. இதற்கு பல நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

இந்நிலையில் இங்கு நடந்த வாக்கெடுப்பில் பாலஸ்தீனத்திற்கு போதிய ஆதரவு (107 வாக்குகள்) விழுந்தன. மொத்தம் இந்த அமைப்பில் 173 நாடுகள் உறுப்பினராக உள்ளன.

இந்த வெற்றிக்கு பாலஸ்தீன மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ள போதிலும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.


இதன் முதற்கட்டமாக இம்மாதம் வழங்க வேண்டிய 60 மில்லியன் டொலர் தொகையை அமெரிக்கா நிறுத்த முடிவு செய்திருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆண்டு முழுவதும் வழங்கும் மொத்த தொகையான 80 பில்லியன் டொலர் தொகை நிறுத்திக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோவிற்கு கிடைக்கும் நிதியில் அமெரிக்கா பெருமளவில் தரும் நாடாக இருந்துள்ள வேளையில் இது பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் வாய்ப்புகளை இது பாதிக்கும் என்று இஸ்ரேல் தனது எதிர்ப்பு கருத்தை வெளியிட்டுள்ளது.

மேலும் சர்வதேச சமுதாயம் அமைதி வழிமுறையை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லும் முயற்சிக்கு எதிராக இருக்கும் என்றும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (4-2)



வியட்நாம் தலைநகர் ஹனாயில் அந்நாட்டு ஜனாதிபதி டுருவாங் டான் சங்கை (வலது) கஜகஸ்தான் ஜனாதிபதி நுர்சுல்தான் நஜர்பயேவ் சந்தித்து கைலாகு வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## வால்ஸ்ட்ரீட் போராட்டத்தில் பல ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது

உலகம் முழுவதிலும் ஆக்கிரமிப்பு போராட்டங்கள் தொடர்ந்து வரும் நிலையில் அமெரிக்காவின் பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வால்ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்பு போராட்டத்தின் உத்வேகத்தால் அமெரிக்கா,ஐரோப்பா, பிரிட்டன் உள்ளிட்ட உலகின் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்பு போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

நியூயோர்க் பிராங்பர்ட், லண்டன் உள்ளிட்ட உலகின் முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமிட்டு தங்கள் போராட்டங்களைத் தொடர்கின்றனர். அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையோரத்தில் கடந்த இரு நாட்களாக எப்போதும் இல்லா அளவிற்கு கடுமையான பனிப் புயல் வீசத் தொடங்கியுள்ள நிலையில் ஆக்கிரமிப்பு போராட்டத்தின் வேகம் சற்று குறைந்திருக்கிறது.

ஓரிகான் மாகாணத்தில் போர்ட் [illegible]ண்ட் பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரு பூங்காவில் தங்கியுள்ளனர். அதற்கு மேல் வேறு பூங்காக்களை ஆக்கிரமிக்கக்கூடாது என பொலிஸார் எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் விடுத்த ஊரடங்கு உத்தரவையும் மீறி ஜேமிசன் பூங்காவில் நூற்றுக்கணக்கானோர் குவியத் தொடங்கினர். தொடர்ந்து பலர் கைது செய்யப்பட்டனர்.

அதேபோல் டெக்சாஸ் மாகாணத்தில் ஆஸ்டின் நகரில் 39 பேரும் டென்னிசி மாகாணத்தில் நாஷ்வில்லேயில் பலரும் கைது செய்யப்பட்டனர். (4-2)

## வெளிநாட்டுக்கு தப்பி செல்ல முயலும் கடாபியின் மகன்

லிபிய முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மூத்த மகன் சயீப் அல் இஸ்லாம் வயது-39 என்பவர் பானிவால்ட் நகரில் புரட்சி படையுடன் நடந்த சண்டையின் போது இராணுவ கொமாண்டராக இருந்தார்.

இந்த நிலையில் கடாபி கொல்லப்பட்டதும் அங்கிருந்து தப்பி தலைமறைவானார்.

ஏற்கனவே போர்க்குற்றம் காரணமாக இவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை அனுப்பியுள்ளது. எனவே, நெதர்லாந்தில் உள்ள ஹாக்கூ நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றில் சரண் அடைய விருப்பம் தெரிவித்து இருந்தார்.

இடைத்தரகர்கள் மூலம் அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். இந்த நிலையில் திடீரென அவர் லிபியாவில் இருந்து வெளிநாட்டுக்குச் தப்ப முயற்சி மேற்கொண்டுள்ளார்.

அதற்காக தென்னாபிரிக்காவில் உள்ள கூலிப்படை [illegible]ழக்களை அவர் நாடியுள்ளார். இவர்[illegible] மூலம் லி[illegible]வில் இருந்து நைஜர் எல்லை வழியாக தப்பி [illegible]செல்ல முடிவு செய்துள்ளார்.

நாடோடி மக்களுடன் சயீப் அல் இஸ்லாமை அனுப்ப தென்னாபிரிக்க கூலிப் படையினர் திட்டமிட்டுள்ளனர்.

அதற்கான பணி உதவியை வெளிநாடுகளுக்கு தப்பி சென்ற அவரது குடும்பத்தினர் செய்து தர தயாராக உள்ளனர்.

இந்தத்தகவலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் சட்டத்தரணி லூயிஸ் மொரேனோ அகாம்போ இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடாபியின் மகன் சாடி கடாபி நைஜர் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார். பாதுகாப்பாளராக இருந்த காரி பீட்டர்ஸ் சாடி கடாபி லிபியாவில் இருந்து தப்பிக்க உதவி செய்தார்.

அவர் கனடாவை சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர். கடாபியின் ஏனைய மகன்கள் சயீப் அல் இஸ்லாம், ஹன்னிபால் ஆகியோருக்கு இவர்தான் பாதுகாலவராக இருந்தார். ஹன்னிபால் அவரது தங்கை ஆயிஷா ஆகியோர் அல்ஜீரியாவுக்கு தப்ப இவர்தான் உதவி புரிந்தார். தற்போது அ[illegible] கனடாவில் உள்ளார். (4-2)




## சவுதித்தூதரின் கொலைக்கும் ஈரானுக்கும் தொடர்பு; அமெரிக்க கூற்றுக்கு கண்டனம்

சவுதி அரேபிய தூதர் கொலை சதித் திட்டத்தில் ஈரான் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா கூறிய குற்றச்சாட்டை எதிர்த்து ஈரான் முறைப்படி நோட்டீஸ் அளித்துள்ளது.

அமெரிக்காவுக்கான சவுதி அரேபிய தூதரை கொல்லச் சதித் திட்டம் தீட்டியதாக ஈரான் வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கர் மன்சூர் அர்பாப்சியார்(வயது-56) என்பவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். அவரின் பின்னணியில் ஈரானின் புரட்சிப் படை இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.

இக்குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வந்துள்ள ஈரான் நேற்று முன்தினம் முறைப்படி இது குறித்து அமெரிக்காவுக்கு நோட்டீஸ் அளித்துள்ளது. இரு நாடுகளும் பரஸ்பரம் தூதரக உறவை மேற்கொள்ளாததால் ஈரானில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகம் மூலம் இந்த நோட்டீஸ் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இந்த நோட்டீஸ் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு கிடைத்ததாக அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.அந்த நோட்டீசில் ஈரான் கூறியிருப்பதாவது,

இதுபோன்று ஒரு நாட்டன் மீது குற்றச்சாட்டுக்கள் கூறுவது அமெரிக்காவின் அரசியலில்ஒரு உத்தியாக பேணப்பட்டுவருகின்றது. பொய்க்காரணங்களைச் சொல்லித் தான் ஈராக்கின் மீது அமெரிக்கா படையெடுத்தது.

அங்கு நடத்திய போரினால் தனது பணப்பையை நிரப்பிய அமெரிக்கா அங்கிருந்து கிளம்பும் வழியைக் காணோம். சர்வதேச சட்டங்களை மீறி ஈரானின் தார்மீக நிலைப்பாட்டை புண்படுத்தும் விதத்தில் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை கூறியதாக ஈரான் இஸ்லாமிய குடியரசிடமும் புரட்சிப் படையிடமும் அமெரிக்கா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். (4-2)

வயிற்றை மட்டும் நினைப்பவன் தலையை பட்டினி போடுகின்றான்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வேக நடையில் முந்துபவருக்கு முதலிடம் யானை நடையில் பிந்துபவருக்கு முதலிடம்

கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த உலகம் தாங்காது. இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியிருந்தார்.

அவர் கூறிய கருத்தை நினைக்கும்போது, அமைச்சர் பீரிஸ்பற்றி எண்ணத் தோன்றுகின்றது.

அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஒரு நல்ல மனிதர் என்று தமிழ் மக்களும் தகைசார்ந்த சிங்கள மக்களும் நினைத்திருந்தனர்.

அவ்வாறான நினைப்புக்கு முக்கிய காரணமாக இருந்தது சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது, சிறந்த அரசியல் தீர்வொன்றை அமைச்சர் பீரிஸ் தயாரித்திருந்தார்.

அந்தத்தீர்வுத்திட்டம் காணி, பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்குவதாக இருந்தது.

அமைச்சர் பீரிஸ் தயாரித்த இத் தீர்வுத்திட்டம் இலங்கை அமைதிப் பூங்காவாக மாறுவதற்கான மகத்தான திட்டம் என்று கருதப்பட்டதால், அவர் மிக உயர்ந்த நல்ல மனிதர் என்ற நினைப்பை தமிழ் மக்கள் மத்தியிலும் அமைதியை விரும்பும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தக்காரணமாயிற்று.

எனினும் அந்த நினைப்பு இப்போது அறவே இல்லையெனலாம்.

அமைச்சர் பீரிஸ் பலவீனமானவர். அவரால் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசுக்கு ஏற்படும் சர்வதேச அழுத்தத்தை தடுக்க முடியாது என அரச உயர்மட்டத்தில் பரவலாக பேசப்பட்டது.

இந்தப் பேச்சு அமைச்சர் பீரிஸை மிக மோசமான மனிதராக ஆக்கிவிட்டது.

அதாவது கற்றறிந்த ஒரு பேராசிரியர், தமிழ் மக்களுக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை வழங்க வேண்டும் என நினைத்த ஒருவர் இப்படி மோசமாக மாறினார் என்பதை உணர்ந்தபோதே தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் மேற்போந்த கருத்து உந்திக்கொண்டது.

உண்மையில் இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டு – அது தொடர்பான விசாரணைகளுக்கான சர்வதேச அழுத்தம் என்பன ஏற்படுகின்றபோதே பேராசிரியர் பீரிஸ் ஒரு நல்ல தகுதியான வெளிநாட்டமைச்சர் என்று புகழப்படுவார்.

அதாவது சர்வதேச அழுத்தத்திற்கு மதிப்பளித்து வெளிப்படைத் தன்மையுடன் போர்க்குற்றத்தை விசாரிக்க வேண்டும்.

தவறு செய்யவில்லை எனில் விசாரணையை எதிர்கொள்ள மறுப்பது எதற்காக? ஆக, பேராசிரியர் பீரிஸ்தனது பதவியை காப்பாற்றுவதற்காக, அரசதரப்பு தன்னையொரு பலவீனமான அமைச்சராக நினைத்துவிடக் கூடாது என்பதற்காக கண்டபாட்டில் பிரசாரம் செய்யும் பணியில் இறங்கினார்.

அதனால் இந்தமண்ணில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலம் மறைக்கப்பட்டது. நீதி புறக்கணிக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் பீரிஸே முக்கிய காரணம்.

ஒரு காலத்தில் நல்ல மனிதராக நினைக்கப்பட்டவர் இப்போது தப்புத்தாளம் போடுகின்றார். எப்படியும் பெயர் எடுக்க வேண்டுமென அமைச்சர் பீரிஸ் நினைப்பது தவறு.

வேகநடைப்போட்டி ஆயின் முந்துகின்றவனுக்கு முதலிடம். யானை நடைப் போட்டியாயின் பிந்துகின்றவனுக்கே முதலாமிடம்.

அந்தவகையில் இலங்கையில் போர்க்குற்ற விசாரணைக்கு அனுமதித்தால் மட்டுமே அமைச்சர் பீரிஸ் தனது நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

# முன்னாள் புலிப் போராளிகளின் உறவினர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

## சிறிலங்கா கார்டியன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களின் உறவினர்கள் இலங்கை தீவிரவாத முறியடிப்பு பிரிவு பொலிஸாரால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக சிறிலங்கா கார்டியன் என்னும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னிப்போரின் இறுதிக்கட்டத்தில் இவ்வாறு சரணடைந்த தமீழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் படைத்தரப்பினரால் பேருந்து ஒன்றில் ஏற்றப்பட்டு அடையாளம் தெரியாத இடமொன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட பின் அவர்களுக்கு என்ன நடந்தது என எவருக்கும் தெரியவில்லை.

படைத்தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்ட பெருமளவிலான விடுதலைப்புலிகள் விடுவிக்கப்பட்டதாக அரசாங்கம் கூறிவருகின்றது.

இந் நிலையில் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களின் உறவினர்களை தீவிரவாத முறியடிப்புப் பொலிஸார் எதற்காக துன்புறுத்துகின்றனர் என்பது தெளிவாகவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களின் செயற்பாடுகள் குறித்து விசாரிக்கப்படுவதாக தீவிரவாத முறியடிப்பு பிரிவு பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆனால் தமக்கு போதுமான தகவல்கள் கிடைக்காத போது விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களின் உறவினர்களை தீவிரவாத முறியடிப்பு பிரிவு பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர்.

லோறன்ஸ் திலகர், க.வே.பாலகுமாரன், யோகரட்ணம் யோகி, தங்கன், இளம்பரிதி, எழிலன், பூவண்ணன், ஞானம், பாப்பா, புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட 58 விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் அந்தப் பேருந்தில் படைத்தரப்பினரால் ஏற்றிச் செல்லப்பட்டிருந்தனர்.

இவர்கள் எங்குள்ளனர் என இதுவரை தெரியாத நிலையில், இவ்வாறு காணமற்போனவர்கள் குறித்து கேள்வி எழுப்பாமல் அமைதியாக இருக்கும்படி உறவினர்களை அச்சுறுத்துவதற்காகவே தீவிரவாத முறையடிப்பு பிரிவு பொலிஸார் இவ்வாறு நடந்திருக்கலாம் என உறவினர் ஒருவர் கூறியுள்ளார்.

படைத்தரப்பினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுவிட்டதாகவே நம்பப்படுகிறது

உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பின்னர் அது தொடர்பாக உற வினர்கள் எவரும் கேள்வி எழுப்பாமல் அமைதியாக இருக்கச் செய்வதற்கே சிறிலங்காவின் தீவிரவாத முறியடிப்பு பிரிவு பொலிஸார் இவ்வாறு அவர்களின் உறவினர்களை அச்சுறுத்திவருவதாக சிறிலங்கா கார்டியன் மேலும் தெரிவித்துள்ளது. (எ-9)

## திருக்கல்யாண விழா

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான திருக்கல்யாண திருவிழா இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு விசேட பூசை நடைபெற்று முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் வீதியுலா வரவுள்ளார்.

அத்துடன் தென்னிந்திய யாழ். கலைஞர்களின் மேளக்கச்சேரியும் நடைபெறவுள்ளது. (4-2-8)

## போட்டியில் முதலிடம்

(கரவெட்டி)

உலக குடியரசு தினத்தையோட்டி தேசிய வீடமைப்பு சபையினால் பாடசாலைக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிபுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடமராட்சி வட இந்து கல்லூரி மாணவி பன்னீர்ச் செல்வம் மாதங்கி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வெற்றியீட்டிய மாணவிக்கு வெற்றிச் சான்றிதழும் 5 ஆயிரம் ரூபாய் காசோலையும் யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளரால் வழங்கப்பட்டது. (4-2-24)

## சீட்டிழுப்பு நிகழ்வு

யாழ். மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடி அபாயக்கல்வி திட்டத்தினை அமுல் படுத்தி வரும் சொண்ட் நிறுவனமானது,

மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவியினை வழங்குவதற்காக அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் மூலம் நிதியினை திரட்டியுள்ளது.

இதில் அதிர்ஷ்டசாலிகளை தெரிவு செய்யும் நிகழ்வானது நாளை வியாழக் கிழமை காலை 10 மணிக்கு இல. 60 அரசடி வீதியில் அமைந்துள்ள சொண்ட் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இச்சீட்டு இழுப்பானது கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெற இருந் தாகவும் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை என்பதையும் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (4-2)

## இயற்கை பசளைகள் தயார் செய்ய முடிவு

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் வடமராட்சி பிரதேசத்தில் ஏனைய பிரதேசங்களிலிருந்து கழிவுப் பொருட்களை சேகரித்து அதை வளப்படுத்தி அதன் மூலம் இயற்கைப்பசளைகளை தயாரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான இடத்தை கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு அருகில் ஓரிடத்தை தெரிவு செய்து அங்கு இவ் இயற்கை பசளைகளை தயாரிக்க தீர்மானித்துள்ளது. (4-2)

## உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில்நுட்ப வியல் கல்வி நிறுவனத்தால் (SLIATE) நடத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியின் 2012 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2010 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த (புதிய, பழைய பாடத்திட்டம்) மாணவர்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னராக பணிப்பாளர் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், இல,665/2 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்திலேயே 350 ரூபாயினை செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலதிக தகவல்களை நாளை மறுதினம் வெளியாகும் வர்த்தமானியிலும் (sliate.net)என்ற இணைய தளத்தின் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும் என நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் வி. எஸ்.விஜயநாதன் தெரிவித்துள்ளார். (4-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



* கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள், அண்ட சராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.
* அறிவுச் சுரங்கத்தைத் திறப்பதற்கான திறவுகோல் மன ஒருமைப்பாடு ஆகும்.
* நாம் பலவீனர்களாக இருக்கிறோம், அதனால் தான் துன்பப்படுகிறோம்.
* இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கிறான், அதற்குப் பணிந்து போவதற்கல்ல.
* இங்கேயே இப்போதே நிறைநிலையை அடையமுடியாது என்றால் வேறெந்த மறுவாழ்க்கையிலும் அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.
* பாவம், புண்ணியம் என்று எதுவும் இல்லை.உள்ளதெல்லாம் அறியாமை மட்டுமே. இரண்டற்ற ஒன்றை உணர்வதால் இந்த அறியாமை விலகுகிறது.
* அடுத்தவனின் பாதையைப் பின்பற்றாதே. ஏனெனில் அது அவனுடைய பாதை, உன்னுடையது அல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்து விட்டாயானால் அதன்பின்னர் நீ செய்ய வேண்டியது எதுவும் இல்லை. கைகளைக் குவித்த வண்ணம் சரணடைந்துவிடு. பாதையின் வேகமே உன்னை உனது இலட்சியத்தில் சேர்ந்து விடும்.

# அடையமுடியாத இலக்கை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேசுகிறது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் கிண்டல்

அடைய முடியாத இலக்கினையும் சாத்தியமற்ற விடயங்களையும் பேசிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு முன்னால் நின்று புகைப்படம் எடுப்பதில் இலங்கையில் ஒன்றும் நிகழ்ந்து விடப் போவதில்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் நேற்று முன்தினம் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்ட பிச்சைதான் முதலமைச்சர் சந்திரகாந்தனின் வருகை என்கிறார். நான் இந்த சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகக் கேட்கிறேன் எதிர்வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்று ஆட்சியமைக்க முடியுமா? ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் ஒன்று சேர்ந்து வாக்களித்தால் கூட அவர்கள் ஆட்சியமைக்க முடியாது. வேண்டுமானால் எதிர்க்கட்சியில் அமர்ந்து தமிழ் சமூகத்திற்கு எந்தவிதமான நன்மைகளையும் பெற்றுக் கொடுக்க முடியாது இருப்பர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையும் மூன்று சமூகங்களும் தற்போது ஒற்றுமையுடன் செயற்படுகிறார்கள். இவ் ஒற்றுமை கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது ஆட்சியமைக்கும் சக்தியை தீர்மானிக்கவுள்ளது. கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தினை கைப்பற்றும் தரப்பினர் ஆட்சியாளர் தரப்பில் இருந்ததால்தான் எமது மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும்.

1923 ஆம் ஆண்டு மிக முக்கியமான தமிழர் ஒருவர் இலங்கையில் தமிழர்களுக்கான தமிழீழம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தார். ஆனால் இன்றுவரை அந்த விடயம் சாத்தியமற்றதாகவே உள்ளது. தமிழீழம் பெறப்படுமாக இருந்தால் எமக்கும் சந்தோஷம்தான். ஆனால் அது சாத்தியமற்ற விடயம் என்பது நன்கு புலப்படுகின்றது.

சாத்தியமற்ற விடயங்களைப் பேசிப் பேசி தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மக்களை குழப்புகின்றனர். மக்கள் இவர்களின் வீண் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் எமது முன்னேற்றத்திற்கும் எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் ஏதுவான விடயங்களை செய்யக்கூடியவர்களின் வழியில் செல்ல வேண்டும். (4-2)

# விபத்தில் காயம்

(அச்சுவேலி)

புத்தூர் சிவன் கோயில் வீதியில் கடந்த திங்கட்கிழமை இரண்டு சைக்கிள்களில் சென்றவர்கள் மோதி விபத்துக்குள்ளானதில் கலைமதி கிராமத்தை சேர்ந்த தே. இராஜேஸ்வரன் என்பவரது கண்களில் காயம் ஏற்பட்டது.

காயம் காரணமாக சிகிச்சைக்காக அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4-70)

# மலேரியாவினால் உயிரிழப்போர் எண்ணிக்கையில் துரிதவீழ்ச்சி

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

(கொழும்பு)

கடந்த பத்து வருடங்களுக்குள் மலேரியா நோயினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 40 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீழ்ச்சி தொடரும் எனவும் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு மேலதிகமாக மூன்று மில்லியன் மக்கள் உயிராபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்படுவார்கள் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுகின்றது.

உலகளாவிய ரீதியில் உயிரிழப்புகளை ஏற்படுத்தும் நோய்களில் ஒன்றான மலேரியா குறிப்பாக ஆபிரிக்க நாடுகளிலேயே அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இந்த நோய் காரணமாக சுமார் ஏழு இலட்சத்து 81 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

துணை சஹாரா ஆபிரிக்காவில் 85 வீதமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் அதில் அநேகமானவர்கள் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.(4-2)

# ஜனாதிபதி ஊடக பேச்சாளருக்கும் சனல்4 ஊடகவியலாளருக்கும் தர்க்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பேச்சாளர் பந்துல ஜயசேகரவிற்கும் சனல் 4 ஆவணப்படத்தை தயாரித்த தயாரிப்பாளரான கெலம் மெக்லயாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் வைத்து இந்த கடுமையான வாய்த்தர்க்கம் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரும் சனல் 4 தயாரிப்பாளருடன் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெக்லயார் இலங்கைக்கு எதிாக பிரச்சாரம் செய்யும் நோக்கில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரிற்கு சென்றிருந்ததாக பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சனல் 4 ஆவணப்படத்திற்கு எதிராக வெளியிடப்பட ஆவணப்படம் மற்றும் ஏனைய இலங்கையின் பிரச்சார ஆவணங்கள் தொடர்பிலான தரவுகளை மெக்கலாயா திரட்டி வந்தாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற தாம் மெக்லயாரை கடுமையான வார்த்தைகளினால் திரட்டியதாக பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வாய்த்தர்க்க சம்பவத்தை சனல் 4 ஊடகக் குழுவினர் வீடியோ காட்சி எடுக்க முயற்சித்தாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை ஊடகவியலாளர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட காரணத்தினால் வீடியோ காட்சி எடுக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-2)

# புற்றுநோய் கட்டிகளை அல்பா கதிர்கள் கட்டுப்படுத்தும்

(கொழும்பு)

சிறுநீர் பையின் கழுத்து பகுதியை சூழவுள்ள சுரப்பியில் உருவாகும் புற்றுநோய் கட்டிகளை அல்பா கதிர்வீச்சுடைய மருந்துகள் கட்டுப்படுத்துவதாக வைத்தியர்கள் கண்டறிந்துள்ளனர்.

லண்டனிலுள்ள வைத்தியசாலையொன்றின் வைத்தியர்கள் மேற்கொண்ட இந்த பரிசோதனை வெற்றிகரமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொள்ளாயிரத்து 22 நோயாளர்களுக்கு அதிகளவு அல்பா கதிர்வீச்சுள்ள மருந்துக்கள் கொடுக்கப்பட்டு இந்த பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்தாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றப்படியென இந்த ஆய்வினை தலைமை தாங்கி நடத்திய வைத்தியர் கிறிஸ் பாக்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இதுவொரு முக்கியமான வெற்றியென பிரித்தானியாவிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-2)

# உள்ளூராட்சி முறைமை பற்றிய அறிவூட்டல்

(கொழும்பு)

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனமும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான இயக்கமும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி முறைமை பற்றிய அறிவூட்டல் செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் தியாகி அறக்கொடை நிலையத்தில் இரு முழுநாள் செயலமர்வாக நடைபெறவுள்ளது.

பிரதேசஅபிவிருத்தியை இலக்காக கொண்டு இச்செயலமர்வானது கட்சி பேதமின்றி நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்விற்கு நகரசபை, பிரதேச சபைத் தலைவர், துணைத்தலைவர், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் என மூவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள புலமையாளர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்ளும் இச் செயலமர்வானது தமிழ் மொழியிலேயே இடம்பெறவுள்ளது. என்பதனை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (4)

# போதைப்பொருள் பெண்வியாபாரி கைது

(கொழும்பு)

கொழும்பு பல பகுதிகளில் போதைப் பொருள் விநியோகித்த பெண் ஒருவர் தெமட்டகொட புகையிரத நிலையத்திற்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 1.6 கிலோகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

29வயதான குறித்த சந்தேகநபர் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-2)

# கரந்தெனிய பொலிஸ் பிரிவில் ஊரடங்குச் சட்டம் அமுல்

(கொழும்பு)


கரந்தெனிய பொலிஸ் பிரிவில் மாத்திரம் அமுலாகும் வகையில் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் நிலவிய அமைதியின்மையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

கரந்தெனிய பகுதியில் வைத்தியர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு சொந்தமான ஆய்வு கூடம் இயங்கிய கட்டடம் மீது கிராம மக்கள் தீயிட்டதை அடுத்த அமைதியின்மை ஏற்பட்டது.


அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியை நாடியதாக கரந்தெனிய பொலிஸார் கூறினார்.

அமைதியின்மையை ஏற்படுத்தியவர்கள் கட்டடங்கள் சிலவற்றையும் சேதப்படுத்தியதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (4-2)



யாழ்.பிரதேச செயலரால் சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது. அதனை யாழ்.மாநகரசபை உதவி மேஜர் மற்றும் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ஆகியோர் இணைந்து இப் பயனாளிக்கு தையல் இயந்திரம் ஒன்றை வழங்குவதை படத்தில் காணலாம்.

# பார்முலா 1 கார் பந்தயத்தால் கிரிக்கெட் புகழ் பாதிக்காது



## –யுவராஜ் சிங் சொல்கிறார்

பார்முலா–1 கார் பந்தயத்தின் 17–வது சுற்றான இந்தியன் கிராண்ட்பிரிக்ஸ் போட்டி டில்லியை அடுத்த கிரேட்டர் நொய்டாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தா சர்க்யூட்டில் கடந்த 30–ம் திகதி நடந்தது. இந்தியாவில் முதல் முறையாக நடந்த இந்த போட்டியை காண ரசிகர்கள் ஆவலுடன் திரண்டு இருந்தனர்.

அத்துடன் இந்திய கிரிக்கெட் வீரர்கள் டெண்டுல்கர், யுவராஜ்சிங், ஹர்பஜன் சிங் மற்றும் இந்தி நடிகர்–நடிகைகள் பட்டாளமும் திரண்டு வந்து பந்தயத்தை நேரில் கண்டு களித்தனர். பார்முலா–1 பந்தயத்திற்கு நிலவும் வரவேற்பு கிரிக்கெட்டின் புகழை மிஞ்சுமா? என்று போட்டியை நேரில் பார்த்த இந்திய கிரிக்கெட் அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங்கிடம் கேட்டபோது கூறியதாவது,

பார்முலா–1 கார் பந்தயத்தின் தொடக்கம் திகிலுட்டுவதாக இருந்தது. கார் எஞ்ஜினில் இருந்து வந்த சத்தம் மிகவும் வியக்கவைப்பதாக இருந்தது. இதற்கு முன்பு நான் இதனை ஒருபோதும் கேட்டதில்லை. இந்த போட்டிக்கு கிடைத்த வரவேற்பை பார்க்கையில் நிச்சயம் பார்முலா1 கார் பந்தயம் இந்தியாவில் நிலைத்து நிற்கும்.

பார்முலா1 கார் பந்தயத்தால் கிரிக்கெட்டின் புகழை தோற்கடிப்பது என்பது கடினமானதாகும். பார்முலா1 கார் பந்தய போட்டி வருடத்திற்கு ஒருமுறை மட்டும் தான் நடைபெறும். இந்த போட்டி ஆண்டுக்கு 6 முறை நடந்தால் கிரிக்கெட்டின் புகழை நிச்சயம் முந்த வாய்ப்பு உள்ளது என்றார்.

# விளையாட்டு பணம் சம்பாதிக்கும்

## அடுத்த 10 ஆண்டுகளில் பார்முலா 1 கார் பந்தயத்தால் ரூ.90 ஆயிரம் கோடி வருமானம்

பார்முலா 1 கார் பந்தயம் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.90 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் வருமானம் கிடைக்கும் என இந்திய தொழில் கூட்டமைப்பான அசோசேம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது குறித்து அசோசேம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது, பார்முலா 1 கார் பந்தயம் டெல்லியை அடுத்து நொய்டாவில் நடைபெற்றது.

இதற்கான டிக்கெட் விற்பனை, விளம்பரங்கள், ஹோட்டல்கள், போக்குவரத்து ஆகியவை மூலம் ரூ.10 ஆயிரம் கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேலும் புதிய வேலைவாய்ப்புகளும் உருவாவதுடன் வர்த்தக மற்றும் குடியிருப்பு கட்டிடங்களுக்கான தேவையும் அதிகரிக்கும்.

இது தவிர, ஜவுளி, ஜெம் மற்றும் ஜுவல்லரி உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட அலங்கார பொருட்கள், பொறியியல் சாதனங்கள், சாப்ட்வேர் மற்றும் வாகனம் ஆகியவற்றின் வர்த்தகத்தையும் ஊக்குவிக்க இந்த பந்தயம் உறுதுணையாக இருக்கும். ஆண்டுதோறும் இந்த போட்டியின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.90 ஆயிரம் கோடிக்கு வர்த்தகம் நடைபெறும். 15இலட்சம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு அசோசேம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# ஆட்ட நிர்ணய மோசடி வழக்கில் பாக்.வீரர்கள் குற்றவாளிகளே

## லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

ஆட்டநிர்ணய மோசடி தொடர்பான வழக்கில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களான சல்மான்பட், மொஹமட் ஆஷிவ் ஆகியோர் குற்றவாளிகள் என லண்டன் நீதிமன்றமொன்று நேற்று தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் அணித் தலைவரான சல்மான் பட் மற்றும் மொஹமட் ஆஷிவ் ஆகியோர் பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றுவதற்கு சதி செய்தாக சுமத்தபட்ட குற்றச்சாட்டை நிராகரித்திருந்தனர்.

எனினும் லண்டனில் செளத்வர்க் கிறவுன் நீதிமன்றம் இவ்விரு வீரர்களும் ஏமாற்றுவதற்கு சதி செய்தமை, மோசடிப் பணத்தை பெறுவதற்கு சதி செய்தமை ஆகிய விடயங்களில் குற்றவாளிகள் என தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 26 – 29 ஆம் திகதிகளுக்கிடையில் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியின் போது சூதாட்ட முகவரான மஸார் மஜித் என்பவரிடம் பணம் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே நோபோல் வீசியதாக சல்மான் பட், மொஹமட் ஆஷிவ் மற்றும் மொஹமட் அமீர் ஆகிய வீரர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. குறைந்த பட்சம் 3 நோபோல்கள் வேண்டுமென்றே வீசப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் மொஹமட் அமீரும் சூதாட்ட முகவர்கள் மஸார் மஜித்தும் ஏற்கெனவே குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சல்மான் பட்டும் மொஹமட் ஆஷிவ் ஆகியோர் மில்லியன் கணக்கான மக்கள் பார்வையிட்ட போட்டிக்கு வேண்டுமென்றே களங்கம் ஏற்படுத்தியதாகவும் இதன் மூலம் அவர்களின் அணியையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையையும் ஏமாற்றியதாகவும் வழக்கு தொடுநர்கள் வாதிட்டனர்.

இவ்விரு வீரர்களுக்கான தண்டனை இவ்வார இறுதியில் அறிவிக்கப்படவுள்ளது. அதுவரை இவர்களுக்கான பிணை நீடிக்கப்பட்டுள்ளது.

சல்மான் பட் ஏழு வருடம் வரையான சிறைத் தண்டனை விதிக்கப் படக்கூடிய நிலையை எதிர் நோக்கியுள்ளார்.

பிரிட்டனில் ஏமாற்றுவதற்கு சதி செய்த குற்றத்திற்கான குறைந்த பட்ச தண்டனையில் இரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் அடங்கலாம்.

இந்திய பார்முலா 1 பந்தயத்தில் பங்கேற்ற ஜேர்மனி வீரர் மைக்கல் சூமாக்கரை சந்தித்த சச்சின் மனைவி அஞ்சலி மற்றும் மகள் சாரா.



# அமெரிக்கா சென்ற எம்.பி...

அவர் மேலும் உரையாற்றுகையில், அரசியல் யாப்பை மீறிச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டு அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கான பூரண அதிகாரம் பாராளுமன்ற சபாநாயகருக்கு உண்டு. விசாரணையின் பின் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் விடுவிக்கலாம். இல்லாவிடின் தண்டிக்க வேண்டும்.

இன்று சர்வதேசத்துடன் சேர்ந்து யுத்தக் குற்ற விசாரணை வேண்டும் எனக் கோருவது 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்திக் கொள்ளவே. இலங்கை அரசாங்கமும் அதற்கு அடிபணிந்து 13 வது திருத்தத்தை அமுல்படுத்துமாயின், அனைவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய அபாய நிலைமையே ஏற்படும்.

13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக நாட்டை கூறுபோடுவதற்கான முதல் படியை எடுத்து வைக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதன் பின்னர் லிபியாவில் செய்தது போன்று, கிறிஸ் பூத பீதியின் போது செய்தது போன்று பணத்துக்காக மக்களை ஒன்று திரட்டி சிவில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த அவர்கள் முயற்சிப்பர்.

அதன் பின்னர் தங்களுடைய பிரிவினவாதக் கொள்கையை நிறைவேற்றிக் கொள்வர். உலக வல்லரசுகளுக்கு அஞ்சாமல் தலை நிமிர்ந்து நின்ற லிபிய தலைவர் கடாபிக்கே மேற்குலகம் மரணம் கொடுத்தது என்றால் எமது நாட்டு மக்கள், தலைவர்களுக்கு அவ்வாறு செய்வதற்கு அவர்கள் தயங்க மாட்டார்கள் எனக் கூறினார். (எ–9)

# புருசெல்ஸ் உதைபந்தாட்டம்; யாழ்.அணிகளும் பங்கேற்பு

05பேர் பங்குபற்றும் புருசெல்ஸ் உதைபந்தாட்டப் போட்டி யொன்றை கொழும்பு சென். ஜோசெப் கல்லூரி எதிர்வரும் சனிக்கிழமை அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தவுள்ளது. தென்னிலங்கைப் பாடசாலைகள் பலவும் கலந்து கொள்ளும் இப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் இருந்தும் மூன்று பாடசாலை அணிகள் கலந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த உதைபந்தாட்டப் போட்டி 11, 13, 15, 17, 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே அகில இலங்கை ரீதியாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் இருந்து வட்டுக்கேட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

# அரசியல் தீர்வு வழங்கினால்...

கனடாவின் ஒட்டாவா நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சம்பந்தன் இதனை கூறியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ சுமந்திரன் ஆகியோருடன் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனும் கலந்து கொண்டார்.

புத்திசாலித்தனமாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் செயற்படுவதன் மூலம் கோரிக்கைகளை வெற்றி கொள்ள முடியும். இதற்கு சர்வதேசத்தின் ஆதரவு அவசியம்.

தமிழர்கள் தனித்துவமான அடையாளங்கள்ள கொண்ட இனம். அவர்களுக்கென்று மொழி, கலாசாரம் உள்ளது. இலங்கையில் உள்ள பெரும்பான்மை சமூகத்தின் வரலாற்றைவிட முந்திய வரலாற்றை தமிழர்கள் இலங்கையில் கொண்டுள்ளனர்.

எனினும் இலங்கையை தமிழர்களுக்கு மாத்திரம் உரிமையான நாடு என நான் கூறவில்லை. வடக்கு கிழக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்குமாறே நான் கோரிக்கை விடுக்கிறேன்.

வழங்க போகும் அரசியல் தீர்வானது முஸ்லிம் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளும் நியாயமான தீர்வாக இருக்க வேண்டும். அதனை எந்த விதத்திலும் மறந்து விடக் கூடாது. வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது போனால் அது மீண்டும் அவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். (எ–9)

# விகாராதிபதி...

விகாரைக்குச் சென்ற கிராமவாசிகள் மரத்தில் கட்டப்பட்டிருந்த விகாராதிபதியின் கட்டை அவிழ்த்து விட்டதுடன் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவினரை கண்டுபிடிக்கும்முகமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ–9)

# அதிகாரப் பகிர்வினை...

அதிகாரப் பகிர்வினை ஒரு போதும் கோரவில்லை. கொழும்பு மற்றும் இந்தியாவில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து, தேர்தல் காலத்தில் திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் ஓடிச் செல்லும் தரப்பினருக்கே அதிகாரப் பகிர்வு தேவைப் படுகின்றது என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் இனவாதத்தை தூண்டுவதன் மூலம் மட்டுமே குறித்த அரசியல்வாதிகள் சொகுசு வாழ்க்கை வாழ முடியும்.

இனவாத பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தினால் தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்படாது.

வடக்கு வாழ் அனைத்து தமிழர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு வாக்களிப்பதாகக் கருத முடியாது.

வடக்கில் புதிய கட்சிகள் இன்னமும் உருவாகவில்லை அவ்வாறு உருவாவதற்கு சந்தர்ப்பங்களும் கிடையாது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு உருவாக்குவதற்கு பிரச்சினை களை எதிர்நோக்கும் தரப்பினரே கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

பிரச்சினை உடையவர்களுக்கு தேவையில்லையென்றால் அரசாங்கம் அது குறித்து கவலைப் பட தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ–9)

# TILKO JAFFNA CITY HOTEL

70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969

Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டபட்ட, குளிரூட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல் களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...



மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive

## மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை

G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

மேலதிக விபரங்களுக்கு:-

கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்
aramex delivery unlimited
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



## இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

நியூ லலீதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134




# தந்தை செல்வாவின்...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜயவர்த்தனவின் அவசர உத்தரவிற்கிணங்க திருகோண மலை தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோ ளின்படி திருகோணமலை நகர சபை தலைவர் க. செல்வராஜாவின் நேரடி மேற்பார்வையின் கீழ் சிலையின் தலைப்பகுதி மீளவும் சீரமைக்கப் பட்டு பிற்பகல் 3 மணிக்கு மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.

சிலை சேதமாக்கப்பட்டமை குறி த்து திருகோணமலை பொலிஸ் தரப்பினர் மிகுந்த கவலையும் கண் டனமும் தெரிவித்துள்ள அதேவேளை சிலை சேதமாக்கப்பட்ட செய்தி தெரிந்த நேரத்திலிருந்து சிலை அமைந்துள்ள பகுதியில் பாதுகாப் பிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இச்சிலை 1983-ம், 1987 ஆம் மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு கிழக்கிலும் குறிப்பாக திரு கோணமலையிலும் இடம்பெற்ற இனவன் முறைகளின் போது பல தடவை சேதமாக்க ப்பட்டு 1995 ஆம் ஆண்டு மீளவும் சீரமைக் கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(எ-9, 11)

# சந்நிதி...

தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித் துறை ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது.(எ-9,24)


## அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்

CIMA -UK நிறுவனத்தின் Approved Listed College

CIMA-UK
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 8.30AM-2PM



Qualified Lectures panel
CIMA Passing Guarantee
12 Years Experience

MCS
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

பதிவுகளுக்கும் 29.10.2011 க்கு முன் நேரில்

Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction

Full Course fee Free All Computer Diploma courses, IELTS & Diploma in Business English, TOEFL

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Schol.


# தமிழர்கள் என்ற...

இருக்கின்ற உறவுகள் கனடாவிலே வாழுகின்றவர்கள் கனேடிய தமிழர் கள் ஆகவும் இருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆக வும் ஒரு தமிழ் பெண் இருக்கிறார். அந்த மூன்றாவது தகைமையை இலங்கை தமிழ் பேசிய இனம் இங்கே கனடாவில் உருவாக்கி இருப் பதை நான் அடையாளப்படுத்தி சொல்ல விரும்புகிறேன்.

எமது மக்கள் தமிழர்களுடைய போராட்டம் விடுதலையோடு சுதந் திரத்தோடு தங்களை தாங்களே ஆளுகின்ற ஒரு நாள் நிச்சயம் மல ரும் என்கிற நம்பிக்கையுடன் எமது மக்கள் இருக்கிறார்கள். அவர்களு க்கு நீங்கள் உறுதுணையாக இரு க்க வேண்டும். அவர்களுக்கு நீங் கள் பரிபூரணமாக ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இன்றைக்கு இலங்கையில் தமி ழர்களுடைய நிலத்திலே வாழ முடி யாமல் அகதிகள் ஆக்கப்பட்டுள்ள நிலைமையில் பல இலட்சக்கணக் கான மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்ப முடியாமல் இருக்கிறார்கள்.

எங்கள் இனப்பரிமாணத்தை இனச் செறிவை-தமிழர்கள் எங்கெங்கு பல மாக இருக்கிறமோ அந்தச் செறி வை குலைத்து தமிழர்களுடைய பலத்தை குறைத்து நாடு முழுவதும் சிங்கள பௌத்த அரசாக- நாடாக மாற்றுவ தைத்தான் அவர்கள் தங்களது நிக ழ்ச்சி நிரலாக கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இந்த அரசாங்கத்து டன் நம்பிக்கை வைத்துக் கொண்டு பேசவில்லை ஆனால் சர்வதேசத் தினுடைய பலத்தை ஆதரவை எங் கள் பக்கம் வைத்திருக்க வேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இருக்கின் றோம். அந்த ஆதரவு எங்களுக்கு தேவையாக இருக்கிறது.

தமிழ் மக்கள் கொடுத்துள்ள அந்த ஆணைக்கு தூய்மையாக நேர்மை யாக வேலை செய்வதற்கு நாங்கள் முடிபு செய்திருக்கிறோம். அதைத் தமிழ் மக்கள் அளித்துள்ள அந்தத் தீர்ப்பை தமிழ் மக்கள் எங் களுக் குக் கொடுத்துள்ள அந்த ஆணையை சனநாயகத்தின் பேரால் ஆட்சி செய் கின்றவர்கள்- நாங்கள் ஒப்புக் கொள் ளாவிட்டாலும் -சனநாயகத்தின் பே ரால் ஆட்சி செய்கின்ற அரசு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு கொடுத்த அந்த ஆணையை ஏற்று நடைமுறையில் இருக்கிற இந்த அரசு ஒரு அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டும் என்ற ர்.(எ-9)


## DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A\L - 2012

புவியியல் - N. Babu

❖ செய்முறைப் புவியியல் ❖
(புள்ளிவிபரவியல்)

பிரிவு - 01- சனி, ஞாயிறு - 10 am
பிரிவு - 02- சனி, ஞாயிறு - 11 am

❖ புதிய அனுமதிகள் வழங்கப்படும் ❖

ஆரம்பம்: 05.11.2011 சனி

(6714)

## ஷாம்சன் இங்கிலீஷ்-3 மாத பயிற்சிநெறி

*Saamson English* என்பது இலங்கையிலேயே முதன்முறையாக மாணவர்களை ஒருவரோடொருவரை உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலத்தை பழக்கப்படுத்தும் ஒரு நிறுவனம்.

ஆங்கிலத்தை கற்பிப்பதை விடுத்து ஆசிரியர்-மாணவர்களுடன் தொடர்ச்சியான உரையாடற் பயிற்சியில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆங்கிலத்தை பழக்கப்படுத்தும் ஒரு முறைமையாகும்.

இது நீங்கள் சிறு குழந்தையாக இருந்தபோது 2 தொடக்கம் 3 வயதுக்குள் எப்படி உங்கள் பெற்றோருடன் நாளாந்தம் உரையாடி தமிழைப் பழகினீர்களோ, அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தமிழ் பேசப்படுகின்ற சூழலில் வசித்து, தமிழைப் பேசப் பழகிய நீங்கள், ஆங்கிலம் பேசப்படுகின்ற சூழலில் (Saamson English) இருந்து ஆங்கிலத்தில் பேசப் பழக விரும்புகிறீர்களா? அப்படியானால் 05.11.2011 இல் ஆரம்பிக்கும் புதிய பயிற்சிப் பட்டறையில் நீங்களும் இணையுங்கள். ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09-11 பிரிவு II 11-01 பிரிவு III 02-04 பிரிவு IV 4-6
3 மாத பயிற்சிக் கட்டணம் - 3000/=

(C-4882)

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். TEL: 0776214567

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

### A/L 2012 DAY CLASS

2011 AUG A/L பரீட்சைக்குத் தோற்றியவர்கட்குரியது

கணித உயிரியல் பிரிவு

திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

| | | |
|---|---|---|
| COM. MATHS | 7.00 - 8.30 | திரு.S. செந்தில்ராஜ் |
| | | திரு.P. செந்தில்நாதன் |
| BIOLOGY | 7.15 - 8.15 | திரு.T. கெங்காதரன் |
| | 8.15 - 9.15 | வழமையான ஆசிரியர் |
| PHYSICS | 9.15 - 10.45 | திரு.R. குகன் |
| CHEMISTRY | 10.45 - 12.15 | திரு. K. சிவத்திரன் |

ஆரம்பமாகிவிட்டது

(அ-4880)


## 180-ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சுசிலா வைகுந்தநாதன் (ரீச்சர் அம்மா)



கடந்த 02.05.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குல தெய்வத்தின் 180வது நாள் இன்று 02.11.2011 அவரின் நினைவுடன் புன்னாலை வடக்கு, வடமராட்சி இந்திரன் அம்மன் கோவிலில் பிரார்த்தனையும் பூசையும் இடம் பெறும்.

தகவல்:
கணவர்: திரு.அ. வைகுந்தநாதன் (அரசாங்க ஓய்வு பெற்ற உத்தியோகத்தரும் சமாதான நீதவானும்)
மகன் கலாநிதி வி. நீதிராஜா (முன்னாள் வவுனியா கச்சேரி உத்தியோகத்தரும் தற்போது கணக்காளரும்)

கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

துன்னாலை வடக்கு
சோளியவத்தையடி
கரவெட்டி
தொ.பேசி: 021-4902987

(6712)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.